Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | புரட்டாதி-18 | 04-10-2004 | திங்கட்கிழமை | ஓசை -229




# தமிழீழ தேசியத்தலைவரின் பன்முக ஆளுமையை சித்திரிக்கும் ஆங்கில நூல் சுவிசில் வெளியீடு

## காவல்துறைப் பொறுப்பாளர் வெளியிட்டு வைத்தார்

**தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்திரிக்கும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்தில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது. நூலை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் வெளியிட்டு வைத்தார்.**

"Prabhakaran" A leader for all seasons எனும் இந் நூல் வெளியீட்டு விழா, சுவிஸ் பேர்ண்ட் நகரில் மண்டபம் நிறைந்த மக்களுடன் நடைபெற்றது. சுவிஸ் நேரம் மாலை 6 மணியளவில் இவ் விழா ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றி வைத்தார். சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவைச் சேர்ந்த அல்பிரட் தலைமையில் நடந்த இந் நிகழ்வில், சிறுவர் - சிறுமியரின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து உரைகளை, தமிழீழ நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு. அம்பாறை

(12ஆம் பக்ககம் பார்க்க)





## ஜெனீவா சென்ற மனித உரிமைகள் குழு அரசியல் விவகாரக்குழுவினரைச் சந்திப்பு

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரும், தமிழீழ தாயக மனித உரிமைகள் குழுவினரும் சுவிஸ் நேரப்படி நேற்றுக் காலை 9.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில், தமிழர் தாயகப்பகுதிகளில் இனம் காணப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதேவேளை, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், தமிழர் தாயக மனித உரிமைகள் அமைப்பினரும், அரசியல் விவகாரக்குழுவினரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும், சுவிஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

## தமிழரின் விடுதலை நோக்கிய வரலாறு தலைவர் பிரபாகரனின் வரலாறே ஆகும்

### - தமிழீழ காவல்துறைப்பொறுப்பாளர் நடேசன்

தமிழீழ தேசிய இனத்தை வீறுகொண்டு எழ வைத்து எமது மக்களை, விடுதலை நோக்கிய பயணத்தை மிகவும் தீர்க்க தரிசனத்துடன் எடுத்துச் செல்கின்ற வரலாறு தமிழீழத்தின் வரலாறு என்று சொல்வதைவிட தமிழீழ தேசியத்தலைவரின் வரலாறு என்றே பார்க்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் சுவிஸில் நடைபெற்ற தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையை சித்திரிக்கும் ஆங்கில நூல் வெளியீட்டு நிகழ்வில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில், சர்வதேச உலகம் பன்முகப்படுத்தப்பட்ட விடுதலைப் போராட்டத்தை அதைக் காக்கின்ற பன்முகப்பட்ட ஆளுமையுள்ள தலைவரை எவ்வாறு பார்க்கும் என்பதையும், இந்தப் போராட்டம் எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் மிக இலகுவாக விளக்குகின்ற வகையில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.



அந்த வகையில் இந்த நூலை உருவாக்கியவர் தமிழர் வரலாற்றில், எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய வரலாற்று நபராகவே எல்லோராலும் பார்க்கப்படுவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

– பருத்தித்துறை வியாபாரிமூலைப்பகுதியில் –

## இளைஞர் மீது படையினர் தாக்குதல் மக்கள் திரண்டு கடும் ஆட்சேபம்

வடமராட்சி வடக்கின் கரையோரக் கிராமமான வியாபாரி மூலைப்பகுதியில் நேற்று மாலை 6.30மணியளவில் இடம்பெற்ற கைகலப்பொன்றில் படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில், வல்வெட்டித் துறைக்கு பருத்தித்துறையூடாகப் பயணித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் இளைஞர்கள் இருவர் பயணித்த உந்துருளியொன்று இயந்திரக் கோளாறு காரணமாக வியாபாரிமூலையிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் முன்னே நின்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து அக் காவலரணில் நின்றிருந்த சிப்பாய்களில் இருவர் கோபமுற்ற நிலையில் குறித்த அந்த இளைஞர்களை மிகவும் மோசமாகத் தாக்கியுள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் நின்ற மக்கள் படையினரிற்கெதிராகக் குரல் எழுப்பினர். அவ்வேளை ஆத்திரமுற்ற படையினர் பொது மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவுக்கு படையினர் தடை

யாழ்.நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் உற்சவம் நடாத்த சிறிலங்கா இராணுவம் தடைவிதித்துள்ளது.

நேற்று ஆலய வருடாந்த பொங்கல் நடாத்துவற்குச் சென்ற அர்ச்சகர் மற்றும் பக்தர்களை இராணுவம் ஆலயத்திற்குள் நுழையக் கூட விடாது தடைசெய்துள்ளது.

2000 ஆம் ஆண்டு நாகர் கோவிலைக் கைப்பற்றிய இராணுவம் இக் கோயிலையும் கைப்பற்றியது.

2002 இல் போர் நிறுத்த உடன்படிக்கையை அடுத்து பொங்கல் உற்சவம் நடாத்த அனுமதித்து வந்த இராணுவம் இம் முறை இத்தடையை விதித்துள்ளது.தடை செய்தமைக்கான காரணம் எதையும் இராணுவம் தெரிவிக்கவில்லை என இணையத்தளச் செய்தியொன்று கூறுகின்றது.

## பன்னிரு வேங்கைகள் நினைவாக நாளை பிரதேச ரீதியாக நிகழ்வுகள்

இந்தியா-சிறிலங்கா அரசுகளின் கூட்டுச்சதிக் குப்பலியான லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல்.குமரப்பா உட்பட 12வேங்கைகளின் 17ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 9மணிக்கு நிகழ்வு ஆரம்பித்து, கருத்தரங்குகள், சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்படும். மாலை 5.05 மணிக்கு பொதுச்சுடரேற்றி, தேசியக்கொடியேற்றி, மாலையிட்டு, மலர்வணக்கம், அகவணக்கம் செய்து நினைவுரைகளுடன் நிகழ்வு நிறைவுசெய்யப்படும். அத்துடன் பிரதேச வாரியாகப் பொதுக்கூட்டங்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கென 12 வேங்கைகளின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள், நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் புனிதப்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முக்கிய இடங்கள், வர்த்தக நிலையங்கள், என்பன சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டும் வருகின்றன.

# எழுத்தாளர் தாமரைச்செல்வியின் 'பச்சைவயல்கனவு' வெளியீட்டு விழா

(அலுவலக செய்தியாளர்)

முப்பது வருடங்களாகத் தொடர்ந்து எழுதிவரும் தாமரைச்செல்வி அவர்களின் எட்டாவது புத்தகமான 'பச்சைவயல் கனவு' நூல் வெளியீட்டு விழா நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் 'வெளிச்சம்' ஆசிரியர் கருணாகரன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது..




மாலை 4.00 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை பெண்கள் ஆய்வு அபிவிருத்தி நிறுவனப் பொறுப்பாளர் சுபா ஏற்றிவைக்க மங்கல விளக்கினை திருமதி சுசீலாதேவி பத்மநாபன், திருமதி.விமலாதேவி பரமநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நூலாசிரியருடைய துணைவர் சி.கந்தசாமி வரவேற்புரையினை நிகழ்த்தி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். தலைமையுரையினைத் தொடர்ந்து வெளியீட்டுரையினை கிளிநொச்சி தமிழ்ச்சங்கச் செயலாளர் வே.பரமநாதபிள்ளை நிகழ்த்தினார்.

அடுத்து முதற் பிரதியினை வே. சுப்பிரமணியத்திடம் இருந்து கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியினை திருமதி. இராசம்மா சுப்பிரமணியம் என்பவரிடமிருந்து ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் ஆ.மார்க்கண்டு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ஏனைய பிரதிகள் வழங்கப்பட்டன.

அடுத்துப் போராளி யோகரட்ணம் யோகி சிறப்புரையாற்றினார். மதிப்புரையினை ஓய்வுபெற்ற உப தபாலதிபர் நா.யோகேந்திரநாதன் செல்வி. கு.மணிமேகலை ஆகியோர் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை நூலாசிரியர் தாமரைச்செல்வி ஆற்றினார். தொடர்ந்து கிளிநொச்சி மகாவித்தியாலய உப அதிபர் பங்கயற் செல்வன் நன்றியுரை நிகழ்த்தி நிகழ்ச்சியினை நிறைவு செய்து வைத்தார். இவ் வெளியீட்டு விழாவில் பொறுப்பாளர்கள், போராளிகள், எழுத்து ஆர்வலர்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ.கு)

- இலங்கையின் சுகாதாரத்தரம் -

# வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் மலைநாட்டிலுமே மிகக் குறைவு

(வவுனியா செய்தியாளர்)

இலங்கையின் சுகாதாரத்தரம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும், மலைநாட்டிலுமே மிகக்குறைவாக உள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யுத்தகால இடப்பெயர்வின் போது வைத்தியசாலைகள் இடித்து அழிக்கப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் வெளிநாட்டு நிதி உதவியில் இவை புனரமைக்கப்படுகின்றன. வடக்கு-கிழக்கில் உள்ள சுகாதார நிறுவனங்களைப் புனரமைக்க 800 மில்லியன் ரூபா சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது எமது சுகாதார சேவை மதிப்பீட்டின் 5-6 வீதமான தேவைகளையே பூர்த்தி செய்யப் போதுமானது.

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் உள்ள சுகாதார நிறுவனங்களைப் போன்று எமது மாகாண சுகாதார நிறுவனங்களின் தரமும் அமையவேண்டும். இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வைத்தியர்கள் மேலதிகமாக இருக்க வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இலங்கையின் சுகாதாரத்தரம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும்,மலைநாட்டிலுமே மிகக் குறைவாக உள்ளது. இது நிவர்த்தி செய்யப்பட்டால் நாம் ஜப்பான் நாட்டின் சுகாதாரத்தரத்தை அடைந்து விடுவோம் என்றார். (10)


**வரிவிளம்பரம்**

**இறப்பர் முத்திரை**

கிளிநொச்சி பால்பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P. 021-2285750 (சி-10551)


## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 19.08.2004 அன்று இறைவனடி சேர்ந்த
எமது அன்புச் செல்வம்

அமரர்

## சுப்பையா தர்மலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் புரட்டாதி மாதம் 18ஆம் நாள் (04.10.2004) திங்கட்கிழமை(இன்று) காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
**தாய்,
சகோதரர்கள்.**

தற்காலிக முகவரி:-
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி:-
உதயநகர் மேற்கு
கிளிநொச்சி.

(சி-10450)



# முழு அளவில் அமைதி ஏற்படும் வரை அமெ.படை ஈராக்கில் தங்கியிருக்காது

## -பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட்

(வோஷிங்டன்)

**ஈராக் நாட்டில் முழு அளவில் அமைதி ஏற்படும் வரை அமெரிக்கப் படையினர் ஈராக்கில் தாங்கியிருக்க மாட்டார்கள் என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் செய்தி ஸ்தாபன மொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஈராக்கில் இடம் பெறுவது சிவில் யுத்தம் அல்ல, கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளே அங்கு நடைபெறுகிறது என்றார்.

மேலும், அமெரிக்காவிற்கு எதிரான தீவிரப்போக்கு இந்தளவிற்கு அதிகரிக்குமென எதிர் பார்க்கவில்லையெனக் கூறிய அவர், சனவரி மாதம் தேர்தல் முடிவடைந்தவுடன் நிலைமை ஓரளவு சுமுகமடையுமெனத் தெரிவித்துள்ளார். முழு அளவில் அமைதி ஏற்படும் வரை அமெரிக்கப்படையினர் ஈராக்கில் தங்கியிருக்க மாட்டார்கள் எனவும், பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் ஈராக்கில் புதிய அரசு குறிப்பிடத்தக்க நிலையை அடைந்தவுடன அமெரிக்க வீரர்கள் வாபஸ் பெறுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் போர்விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளதோடு 11பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் இருவீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் பலூஜாவிற்கு 15 கி.மீற்றர் தெற்கே கார்க்குண்டு வெடிப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஈரர்ககில் மற்றொரு இடத்தில் அமெரிக்கப் படையைச் சேர்ந்த ஒருவர் தீவிரவாதிகளால் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ஈராக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



பலூஜாவில் அமெரிக்கப்படையினரின் விமானத்தாக்குதலில் காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதைக், காணலாம்.

# பாடசாலையில் குண்டுவெடித்து ரஷ்யாவில் 9 சிறுவர்கள் பலி


(மொஸ்கோ)

ரஷ்யாவில் பாடசாலைக் கட்டடம் ஒன்றிற்குள் மாணவ மாணவிகள் படித்துக்கொண்டிருந்த சமயம் குண்டு ஒன்று வெடித்ததில் ஒன்பது சிறுவர்கள் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

ரஷ்யாவில் மின்ஸ் நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமப் பாடசாலையில் மாணவ-மாணவிகள் படித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று வகுப்பறையில் குண்டு ஒன்று வெடித்தது. பாடசாலை முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது. பாடசாலை மாணவ-மாணவிகள் அலறி அடித்துக்கொண்டு சிதறி ஓடினார்கள்.

குண்டு வெடித்த இடத்தில் 9 குழந்தைகள் உடல் சிதறிப் பிணமாகக் கிடந்தார்கள். ஏராளமான மாணவ-மாணவிகள் காயமடைந்தனர். அனைவரும் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சம்பவ இடத்திற்குப் பொலிசார் விரைந்து சென்றனர். தீவிரவாதிகளின் சதிச் செயலாக இருக்கக்கூடும் என்று பொலிசார் கருதுகிறார்கள்.

செச்னியத் தீவிரவாதிகள் ரஷ்யப் பாடசாலைச் சிறுவர்களை யும், பெற்றோரையும் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த சம்பவத்தில் அண்மையில் நானூறிற்கும் மேற்பட்ட குழந்தைகளும், பெறறோரும் பலியானது தெரிந்ததே.



இஸ்ரேலிய இராணுவத்தினரின் தேடுதல் வேட்டையின்போது நடந்த தாக்குதலில் இரு பலஸ்தீனர்கள் பலியானதையடுத்து கதறியழும் அவர்களது உறவினர்கள்.

# பதவியைத் தக்க வைக்க முஷாரப் நடவடிக்கை

பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இராணுவத்தில் அதிபர் முஷாரப் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார். பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இராணுவத் தலைமைத் தளபதியாகவும் இருக்கிறார். அவர் தலைமைத் தளபதியாக நீடிக்க பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அதனையடுத்து அவர் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளார். இராணுவத்தில் புதிய பதவியை ஏற்படுத்தி அவற்றில் தனக்கு வேண்டிய இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளார்.

பாகிஸ்தான் உளவு நிறுவன (ஐ.எஸ்.ஐ)த் தலைவராக இருந்த அசானூல்ஹக் பதவி உயர்த்தப்பட்டு முப்படைக்குத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுள்ளார். அவருக்கு 4 நட்சத்திரங்கள் ஜெனரல் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கராச்சி நகர இராணுவத் தளபதி அஷனன் சலீமுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர் அனைத்து இராணுவப் பிரிவுக்கும் துணைத் தளபதி ஆகிறார். இவர் கடந்த ஜூன் மாதம் கொலை வெறித் தாக்குதலில் இருந்து தப்பினார்.

2007ஆம் ஆண்டு வரை அதிபராகவும், இராணுவத் தலைமைத் தளபதியாக நீடிக்கவும். முஷாரப் இராணுவத்தில் தனது பிடியை இறுக்கியுள்ளதாக உலக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

# பாக்.இல் ஆவேசம் கொண்ட மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு தீ வைத்தனர்

பாகிஸ்தான் நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள சியால்கோட் நகரில் மசூதியில் குண்டுவெடித்து பலியானோர்களது உடல்கள் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன. அப்போது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு திரும்பி வந்த இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.



பாகிஸ்தானின் சியால்கொட் நகரில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் இறந்த ஒருவரின் இறுதி ஊர்வலத்தின்போது ஆத்திரமடைந்தோர் வீதியில் ரயர்களைக் கொளுத்துகின்றனர். (அருகில் பாகிஸ்தான் பொலிசார்)

சியால்கோட் நகரில் உள்ள ஒரு நீதிமன்றில் ஆவண அறை தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அங்குள்ள பொலிஸ் நிலையத்திற்கும் இவர்கள் தீ வைத்தனர். பொலிஸ் நிலையத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் எரிந்து சாம்பராயின. தகவல் கிடைத்ததும் இராணுவத்தினர் விரைந்து சென்று கலவரக்காரர்களை விரட்டி அடித்தனர். இருந்த போதிலும் அங்கு தொடர்ந்து ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.



அல் – ஹைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகப் புதிதாகக்கிடைத்த தகவலையடுத்து, சியோலில் இன்சியன சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதையும், கடமையிலிருக்கும் பொலிசாரையும் காணலாம்.




ஹெயிட்டியில் நடைபெற்ற அரசியல் கொந்தளிப்புக்குப் பின்னர் அமைதி நிலவும் நிலையில் அங்கு காவலரண் ஒன்றில் காவலிருக்கும் ஹெயிட்டிப் பொலிஸ்.

# பிரி.பிரதமரின் இதயத்துடிப்பை சீராக்க சத்திரசிகிச்சை

(லண்டன்)

பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயரின் இதயத் துடிப்பு ஒரே சீராக இல்லாமல் தாறுமாறாக இருந்தது. அதை சரி செய்ய கரேட்டர் அப்ளேஷன் என்ற சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சத்திரசிகிச்சையில் அவரது ரத்தக்குழாய் வழியாக இரு,தயத்தின் உள்கட்டுக்குள் ஒரு வயர் செலுத்தப்பட்டது. அந்த வயர் இருதயத்தின் சீரற்ற துடிப்பை அளந்து தெரிவித்தது. பிறகு அந்த வயர் வழியாக இருதயத் துடிப்பைச் சீராக்கும் சக்தி செலுத்தப்பட்டது. இருதயத் துடிப்பைச் சீராக்கும் இந்த சத்திரசிகிச்சைக்கு 2 1/2 மணிநேரம் பிடித்தது. சத்திரசிக்சைக்கு முன் இதுபற்றி டொனி பிளேயர் கூறியதாவது.

இருதயத்தின் துடிப்பு சீராக இல்லை என்பது நேற்று இரவு கண்டுபிடிக்கப்பட்டது. பயப்படும் படியாக ஒன்றும் இல்லை. அந்த இருதயத் துடிப்பைச் சீராக்க வேண்டி இருக்கிறது. இது வழக்கமான நடைமுறைதான்.

கடந்த 2 மாதங்களில் எனக்கு இதேபோன்று இருதயத் துடிப்பு மாறுபட்டு உள்ளது. அப்போது அது எனது பணிகளைச் செய்யத் தடையாக இருந்ததில்லை. இப்போது அதைச் சரிசெய்ய வேண்டி இருக்கிறது. நான் நலமாக இருக்கின்றேன் என்றார்.

# புதிய தங்கச் சுரங்கம் சீனாவில் கண்டுபிடிப்பு

சீன வடமேற்குப் பகுதியின் கன்சு மாகாணத்தில் பெருமளவு தங்கக் கனிமம் இருப்பதை சீனக் காவல் படைப் பிரிவு ஒன்று கண்டுபிடித்துள்ளது. யங்ஷன் சுரங்கப்பகுதியில், 288 சதுர கி.மீ. பரப்பளவில், 66 இடங்களில் தங்கக் கனிமம் இருப்பதை அவர்கள் கண்டுபிடித்தனர். அங்கு 156 டன் தங்கம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 181 கோடி அமெரிக்க டொலாராகும்.

# கோரிக்கைகளை நிறைவேற்றத் தயங்கினால் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தயார்!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(திருமலை)

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தாம் முன்வைத்துள்ள பதினைந்து கோரிக்கைகளுக்கு இம்மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன பதாகத் தீர்வு காணுவதற்குத் தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சிறிலங்கா கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டி மெல்லுக்கு அறிவித்துள்ளது.**

இலங்கையில் உள்ள தமிழர் ஆசிரியர்களில் 98 சத வீதமானோரை தனது உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் "இரண்டரை வருடங்கள் கழிந்தும் வடக்கு-கிழக்கில் போரினால் அழிந்துபோன, இடம்பெயந்த பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை. அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை" என்று செயலாளர் தாராடி மெல்லுக்குத் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் செயலாளர் தாரா டி மெல்லுக்கு நான்கு பக்க மகஜரில் பதினைந்து கோரிக்கைகள் பற்றி விபரித்துள்ளார்.

கோரிக்கைகள் வருமாறு;

தமிழர்களின் வரலாறு தமிழ்மொழிமூலபாட நூல்களில் தொடர்ந்து திரிபு செய்யப்பட்டு வருகின்றது. தவறுகளைத் திருத்துவதாக உறுதியளிக்கப்பட்டது. ஆனால், உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை.

இடைக்கால சம்பள அதிகரிப்பாக 3000 ரூபா மாதம் வழங்கப்படவேண்டும்.

160 தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அமைச்சரவை மற்றும் திறைசேரி அங்கீகாரம் கிடைத்தும் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. உடனே நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.

820 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு I., II, III ஆகிய வற்றுக்கான பதவியுயர்வுகளில் தமிழர், முஸ்லிம்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாரபட்சம் நீக்கப்படவேண்டும்.

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை III வகுப்பில் காணப்படும் தமிழ அதிகாரிகளுக்கு உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பதில் அடிப்படையில் பணிபுரியும் அதிபர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அப்பதவிகளில் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு நிலுவையாக நிற்கும் 325 மில்லியன் ரூபா சம்பளப்பாக்கி உடனடியாக வழங்கப்படவேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆசிரியர், அதிபர்களுக்கு வழங்கப்படாதுள்ள இடர்பாடு கடன், சைக்கிள் கடன், வாகனக் கடன், வீடு கட்டுவதற்காக வழங்கப்பட வேண்டிய ஐந்து வருட சம்பள முற்பணம் ஆகியன உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கிற்கு வெளியேயுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் மேற்பார்வை தமிழ் தெரிந்த அதிகாரிகளைக் கொண்டு செய்ய வேண்டும்.

வடக்கு-கிழக்கிற்கு வெளியே தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் தமிழரல்லாத சிங்களவர்களை அதிபர்களாக நியமிப்பதையும், சிங்களக் கல்வி சாரா ஊழியர்களை நியமிப்பதையும் நிறுத்த வேண்டும்.

அதிபர் சேவை, ஆசிரியர் சேவைகளுக்கு இடையேயுள்ள சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும்.

டி.சி. பெரேரா அறிக்கையின் படி ஐந்தாண்டுகளாக வழங்கப்படாதுள்ள சம்பள உயர்வுகள் ஆசிரியர், அதிபர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி கல்வித் திணைக்களத்திடம் இரண்டரை வருடங்களாக கையளிக்கப்படாதுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள 100இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை உடனடியாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்மாணம்

வவுனியாவில் உள்ள சிதம்பரபுரம், புளியங்குளம், உலுக்குளம், நேரியகுளம், நெடுங்கேணி ஆகிய வைத்தியசாலைகளில் மகப்பேற்று விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் A.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (10)



கிளி. பரந்தன் இந்துமகாவித்தியாலயத்தின் புதிய இரண்டு மாடிக் கட்டடம் அண்மையில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படுவதை படத்தில் காணலாம். இது நிகொட் திட்டத்தினால் அமைக்கப்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (படம் : சோ,கு)

## குளவிகள் கொட்டியதால் பத்துப் பேருக்கு மேல் பாதிப்பு!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் புதுப்பாலப் பகுதியில் குளவிகள்கொட்டியதால் 10இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இச் சம்பவமானது நேற்று முன்தினம் காலை 11.00 மணியளவில் இடம் பெற்றது.

திடீரென க் கலைந்த குளவிகள் கொட்டியதில் கரன்-டினோச் (வயது 11), சின்ராசு சின்னம்பி (வயது16) ஆகியோர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டனர். மதியவேளை ஆகையால் சந்தைக்குச் சென்ற வேளை பலர் குளவிகளால் தாக்கப்பட்டு சிறு பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (12)

## புதுக்குடியிருப்பு-வற்றாப்பளை பிரதானசாலை பல இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு



(அலுவலக செய்தியாளர்)

புதுக்குடியிருப்பு-வற்றாப்பளை பிரதான சாலை பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மேற்படி வீதியானது வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் போக்குவரத்திற்கு முற்றாகத் தடையாகவே அமைந்திருந்தது. இந்த நிலையில் வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்டத்தினால் இவ்வீதியில் 3 இற்கும் மேற்பட்ட பாரிய அளவிலான பாலங்களும் 10 இற்கும் மேற்பட்ட மதகுகளும் தரமானமுறையில் அமைக்கப்பட்டுவருவதோடு வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவ் வேலைத்திட்டத்திற்காக 25 இலட்சத்து 76ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 8.6கிலோமீற்றர் நீளமான இவ்வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது. (ச,தீ)

## தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானம்

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறை ஏற்பாடு செய்த சிரமதான நிகழ்வு வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும், மகளிர் அரசியல்துறைப் போராளிகளும் மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் அலை தலைமையில் நேற்று முன்தினம் காலை 8.00 மணிமுதல் நண் பகல் 12.00 மணிவரை சிரமதான நிகழ்வில் கலந்துகொண்டனர். (10)

## மறைக்கல்வி மாணவர் கண்காட்சி

(வட்டக்கச்சி)

கட்சன் வீதி புனித சூசையப்பர் ஆலயத்தில் மறைக்கல்வி கற்கும் மாணவர்களுக்கான கண்காட்சி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

3.10.2004 மறைக்கல்வி தினமாக பிரகடனப் படுத்தப்பட்டதையடுத்து மறைக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கருத்தரங்கு, வகுப்பு, விளையாட்டு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு வகுப்புக்கள் நடைபெற்றன.

யாழ். மறைமாவட்ட மறைக் கல்வி இயக்குனர் ஜே.ஜே.மௌதிஸ் மற்றும் அவரின் குழுவினராலே இந் நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இந் நிகழ்வுகளில் வட்டக்கச்சிப் பங்கு மாணவர்கள் கலந்து கொண்டனர். (12)

## வயல் வரம்பில் சறுக்கி வீழ்ந்த இளைஞன் பரிதாபகரமாக மரணம்

(அலுவலக செய்தியாளர்)

வயல்வரம்பின் மேலாக ஓடிச் சென்றுகொண்டிருந்த இளைஞன் அதிலிருந்து தவறுதலாக வழுக்கி வீழ்ந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பரந்தன் குமரபுரத்தில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பரந்தன் குமரபுரம் கால்ஏக்கர் கமம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி-சுகந்தன் வயது 20 என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வயல் வரம்பின் மேலாக வீட்டை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருந்த போது வயல்வரம்பில் தவறுதலாகச் சறுக்கி வீழ்ந்து மயக்கமடைந்தார். இந்நிலையில் சகவேலையாட்களால் கிளி.மாவட்ட மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்ட போது மேற்படி இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றது. (லோ,தீ)

## 5 நாட்கள் பற்சிகிச்சை நடைபெறும்

முல்லைத்தீவிலுள்ள முல்லை மாவட்ட வைத்தியசாலையில் சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பற்சிகிச்சை நடைபெறுமென முல்லை மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா தெரிவித்தார். இவ்வளவு காலமும் வாரத்தில் இருநாட்கள் மட்டுமே நடைபெற்று வந்த பற்சிகிச்சை வாரத்தில் ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)




திருமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து திருமலை நியூசில்வர் ஸ்டார் ஹோட்டலில் கடந்த வெள்ளியன்று நடத்திய சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளில் பங்கு பற்ற முஸ்லிம் முன்பள்ளி ஆசிரியைகள், குழந்தைகள் வரவேற்கப்படுவதையும், பிரதம விருந்தினராகப் பங்கு பற்றிய மாகாண ஆரம்பப் பள்ளிக் கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா பேசுவதையும், கௌரவ விருந்தினரான உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தவநாதன், தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப் பணிப்பாளர் கிருபா, கிழக்கு மாகாணப் பணிப்பாளர் சீசர் நிகழ்வுக்குத் தலைமை வகித்த கலைவர்ணன், நெறியாளர் சாகுல் ஹமீது ஆகியோர் அமர்ந்திருப்பதையும், மழலைகளின் கலைநிகழ்ச்சி ஒன்றையும் படங்களில் காணலாம். (படம்-குரு)

# குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளின்


# நினைவு தினத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு

## யாழ். குடாநாட்டு மக்கள் அமைப்புக்கள் நடவடிக்கை

**குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட 12 மாவீரர்களது நினைவுதினம் நாளை யாழ். குடாநாடெங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க யாழ். குடாநாட்டு மக்கள் அமைப்புக்கள் ஏற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றன.**

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர், தேசிய எழுச்சிப் பேரவையினர் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியோரது ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நினைவு தின நிகழ்வுகள் பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் அரச, அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பனவற்றில் இடம்பெறவுள்ளன.

இந்நினைவு தினத்தில் விசேட நிகழ்வுகள் வடமராட்சியின் வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட 12 மாவீரர்களது நினைவுத் தூபியில் இடம்பெறவுள்ளன. (33)



"கண்ணீர்பயணங்கள் நூல்"வெளியீட்டு விழாவில் யாழ். மலாயன் கபே உரிமையாளர் அவர்கள் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனிடம் இருந்து நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். (படம் - செல்வா)

# மாவீரர் எழுச்சி நாள் குறித்து தீவகத்தில் கலந்துரையாடல்

மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகளை யாழ்.தீவகப்பிரதேசத்தில் அனுஷ்டிப்பது குறித்த முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு சனசமுக நிலையத்தில் இடம்பெறும்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடக செயலாளர் ப.கனகலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் எதிர்வரும் நவம்பர் மாதம் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகளை தீவகத்தில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளது. (33)

# எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு

## யாழ். தாய் சேய் நல வைத்திய அதிகாரி தெய்வேந்திரம் கவலை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் எயிட்ஸ் வேகமாகப் பரவி வருகின்றது. இதில் யாழ்ப்பாணத்திலும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கூடுதலாகவுள்ளது.

இது கவலை தரும் விடயமாக இருப்பதாக யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய தாய்சேய் நல வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரம் கூறியுள்ளார்.

யாழ். சுகாதார பரிசோதகர்களுக்கு கருத்துரை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது வரை இலங்கையில் 124 பேர் எயிட்ஸ் நோயினால் உயிரிழந்துள்ளனர். அதில் 24 பேர் யாழ். மாவட்டத்திலேயே மரணமானவர்கள். இது ஒப்பீட்டளவில் மிகவும் கூடிய அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இல. பொறியியலாளர் ஸ்தாபனத்தின் வடக்குக் கிளைக் கூட்டம் கிளி.இல்

## - முக்கிய விரிவுரைகளுக்கும் ஏற்பாடு

இலங்கை பொறியியலாளர் ஸ்தாபனத்தின் வடக்குக்கிளையின் கூட்டம் இம்முறை கிளிநொச்சியிலுள்ள கட்டடத்திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக பிரதம பொறியியலாளர் சுந்தரமோகன் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாத்துறைகளுக்குமான பொறியியலாளர்களை விட கிளிநொச்சி முல்லைத்தீவில் அதிகமான பொறியியலாளர்கள் இருப்பதால் இக்கூட்டத்தை இம்முறை கிளிநொச்சியில் நடாத்தத் தலைமைப்பீடம் அனுமதி அளித்துள்ளது.

இக்கூட்டத்தில் "உள்சிவர்கட்டுமானம்" பற்றி அமெரிக்காவிலிருந்து வருகை தந்துள்ள பொறியியலாளர் சுகுணேஸ்வரன் விரிவுரை நிகழ்த்தவுள்ளார்.

"தெருக்கள், பாலங்கள், கட்டுமானம்" பற்றி ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தித்திணைக்கள பொறியியலாளரும்,இலங்கை பொறியியலாளர் ஸ்தாபனத்தின் வடக்குக் கிளைத் தலைவருமான ரி.தில்லைநாதன் விரிவுரை நிகழ்த்தவுள்ளார். காலை 9.30 மணிமுதல் 2.30 மணிவரை நடைபெறவுள்ள இக்கூட்டத் திற்கு முக்கியமாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள BSC பட்டம் பெற்ற பொறியியலாளர்களை கலந்துகொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

# நாளைமறுதின சந்திப்பில் இராணுவ நெருக்குவாரங்களை நீக்குமாறு யாழ்.தளபதியிடம் தொண்டர் அமைப்புக்கள் கோரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் படைத் தளபதிகளுக்கும், யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் அமைப்புகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நாளை மறுதினம் முற்பகல் 11 மணியளவில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற இணைய செயலகத்தில் இடம்பெறும்.

இதில் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் உள்ளிட்ட படையதிகாரிகளும் யாழ். மாவட்ட மனித உரிமைகளைப் பேணும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

யாழ். குடாநாட்டு மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்களை நீக்குவதற்குரிய வற்புறுத்தல்கள் படைத் தரப்பிற்கு மக்கள் அமைப்புக்களால் இச்சந்திப்பின் போது விடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (33)

# யாழ்.இல் அதிநவீன வைத்தியசாலை அமைக்க ஜப்பான் அரசு உதவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதிநவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அதிநவீன வைத்திய சேவையின் அவசியத்தை கவனத்திற் கொண்டு ஜப்பான் அரசாங்கம் இவ்வாறான ஓர் வைத்தியசாலையை அமைப்பதற்கான உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

புற்றுநோய், நீரிழிவு, காசநோய், இருதயநோய் உள்ளிட்ட மிக முக்கியமான நோய்களுக்கு நவீன முறையில் சிகிச்சையளிக்கக் கூடிய வசதிகளுடன் இது அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ். இல் ஊனமுற்றோரை தேடிச் சென்று உதவி யு.என்.எச்.சி.ஆர்., ஜெயப்பூர் நிறுவனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயமும், ஜெயப்பூர் செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் நிறுவனமும் இணைந்து யாழ். குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்டு உறுப்புகளை இழந்தோருக்கான மறுவாழ்வு வழங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

அந்த அடிப்படையில் யாழ். குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு கை, கால் போன்ற உறுப்புக்களை இழந்தும் வசதி வாய்ப்பு இன்மையால் செயற்கை உறுப்புக்களை பொருத்தாத பின்தங்கிய பிரதேச வாழ் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்குரிய செயற்கை உறுப்புக்களை வழங்கியுள்ளது.

இந்நடவ்டிக்கை மூலம் தென்மராட்சி, தீவகம், வடமராட்சி வாழ் மக்கள் அதிக பயனடைந்துள்ளனர். (33)

# மண்கும்பானில் மண் ஏற்ற இராணுவம் ஒத்துழைப்பு

## –மக்கள் அமைப்புக்கள் கண்டனம்

(தீவகம்)

மண்கும்பானில் மக்களின் எதிர்ப்பையும் மீறி சிலர் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மணல் ஏற்றி விற்பனை செய்துவருவதை மக்கள் அமைப்புக்கள் கண்டித்துள்ளன.இது தொடர்பாக வேலணைப்பிரதேசச் செயலகம், பிரதேசசபை உள்ளிட்ட பல செயலகங்களுக்கு அந்த மக்கள் அமைப்புக்கள் கடிதங் களையும் அனுப்பி வைத்துள்ளன. தொடர்ச்சியாக மண் ஏற்றப்படுவதால் மண்கும்பான் கிராமத்தில் நன்னீர் உவர்நீராக மாறிவருவதாகக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மின் விநியோக வேலையைத் துரிதப்படுத்த வடமராட்சி மக்கள் மீண்டும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கிழக்கில் உள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு துரித நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபையினர் மேற்கொள்ளவில்லையென அப் பகுதி மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கென பெரும் தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அந் நிதியைப் பயன்படுத்தி மின்சார விநியோக மற்ற கிராமங்களுக்கு மின் வழங்குவதற்கு மின்சார சபையினர் துரித நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்டுள்ள இப்பகுதி மக்கள் தமக்கான மின் விநியோக நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் மீண்டும் கோரியுள்ளனர். (33)

# யாழ்.இல் போரூட் நிறுவனத்தால் "தாய் சேய் நலத்திட்டம்" அமுல்

(யாழ்ப்பாணம்)

"போரூட்" அமைப்பினால் யாழ். குடாநாட்டில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் "தாய்சேய் நலத்திட்டம்" ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இத் திட்டத்தின் கீழ் குழந்தைகளைப் பராமரித்தல், அவர்களுக்குரிய கல்வி வழிகாட்டல்களை வழங்குதல், குடும்ப முகாமைத்துவம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் குறித்த ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிகள் குடும்பப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.. (33)

# குடவத்தைப் பாலம் சேதம் புனரமைக்க மக்கள் கோரிக்கை

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் உள்ள குடவத்தைப் பாலம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

நீண்ட காலமாக உடைந்த நிலையில் காணப்படும் இப்பாலத்தை உரிய வகையில் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வராமை குறித்து கடும் விசனம் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் இது புனரமைப்புச் செய்யப்பட வேண்டுமெனவும் கோரியுள்ளனர். (33)

# மானிப்பாய், தெல்லிப்பளையில் 30 கிணறுகள் அமைக்க யுனிசெப் அமைப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் மற்றும் தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களில் 30இற்கும் மேற்பட்ட பொது குடிநீர் கிணறுகளை அமைப்பதற்கு ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) நடவடிக்கை எடுத்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்கள் அதிகளவில் வாழும் மேற்படிப் பிரதேசங்களில் அடிக்கடி ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டினால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே யுனிசெப் அமைப்பு இந்நடவடிக்கையை எடுத்துள்ளது.

இத்திட்டத்திற்கமைவாக பொதுக் குடிநீர்க்கிணறுகளை அமைப்பதற்கான இடங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. (33)

# சந்திரிகாவுக்குப்பின் யார்?

உப்புள் யோசப் ப்ர்ணாந்து
(லங்காதீப)
மொழியாக்கம் - வடிவேல்

கடந்த 26-09-2004 அன்று சிறிலங்காவின முதுபெரும் அரசியல்வாதியான எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கவின 45 ஆவது சிரார்த்த தினமும், சிறிமாவோவின் 4ஆவது சிரார்த்த தினமும் அவரது உறவினர்களால் நினைவு கூரப்பட்டது.

அன்றைய தினத்தில் சந்திரிகாவின் சனாதிபதிப் பதவிக் காலம் முடிவடையும்போது பண்டாரநாயக்க - ரத்வத்த குடும்பத்தின் 4ஆவது தலைமுறையினரான அநுரா பண்டாரநாயக்கவை சனாதி பதியாக மகுடம் சூட்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

பண்டாரநாயக்க பரம்பரையினர் ஒருவருக்கு மகுடம் சூட்ட வேண்டுமாயின் அது சொலமன் பரம்பரையில் வந்தவராகவே இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒருவர் அநுரா பண்டார நாயக்க ஆவார். அவர் சொலமன் றிச்சர்ட் டயஸ் பரம்பரையின் 4 ஆவது தலைமுறை என்பதால் அவரே மகுடத்துக்கு உரியவராகிறார். அவர் பண்டார நாயக்க ரத்வத்த குடும்பத்தில் முக்கியமான ஒருவராக இருந்தும் இதுவரை அவருக்கு எந்தவிதமான முக்கிய பதவியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் வழங்கப்படவில்லை. அதற்குத் தடையாக இருந்தவர் சந்திரிகா ஆவார்.

ரத்வத்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பண்டார நாயக்க பரம்பரையில் இணைந்தது சிறிமாவோ, எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கவை மணந்ததால் ஆகும். உண்மையில் ரத்வத்த பரம்பரையில் உயர் பதவி வகிப்பதும் அதிகாரம் வகிப்பதும் பெரும்பாலும் பெண்களே. அவ்வாறான பரம்பரையில் வந்தவரே சிறிமாவோ. சிறிமாவோவின் பாட்டனாருக்கு மூன்று பிள்ளைகள். அவர்களில் ஒருவர் கிராம வைத்தியர். மூன்று பேரும் பெண்கள். அவர் களில் இரண்டாவது பெண்ணின் கணவர் வீட்டுமாப்பிள்ளையானார். அவர்களுக்குப் பிறந்த குழந்தையே சிறிமாவோ. சிறிமாவோவின் தாயாரும் தனது தகப்பனாரின் வைத்திய முறையை அறிந்து வைத்து அக்காலத்தில் புகழ் பெற்றார். நாட்டு வைத்தியத்தில் அதிபதியானார்.

எனினும் சிறிமாவோ பண்டாரநாயக்க எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவை மணந்ததன் பின்னர் தனது பெண் ஆதிக்க மரபு முறை ஆணாதிக்கத்திற்கு மாறியது.

பண்டார நாயக்க வம்சம் ஆணாதிக்க முறையை கொண்டதென்பதை "THE EXPEDIENT UTOPIAN" என்ற நூலை எழுதிய ஜேம்ஸ் மெனர் விளக்கியுள்ளார். பண்டார நாயக்கவின் தாயாரும் சகோதரிகள் இருவரும் ஹொரகொல்ல வளவை விட்டு வேறு இடத்தில் வசித்து வந்தனர். பண்டார நாயக்கவும் அவரது தந்தையும் மட்டுமே ஹொரகொல்லவில் வசித்தனர். பண்டார நாயக்கவின் சரித்திரத்தில் அவரது தந்தையார் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பினும் தாய் பற்றிப் பெரிதாகக் குறிப்பிடப் படவில்லை. பண்டாரநாயக்க பெண்ணாதிக்க வம்சத்தில் மணம் முடித்திருப்பினும் தனது பரம்பரையில் உள்ள ஒருவர் எதிர்காலத்தில் அதிகாரம் மிக்கவராக இருக்கவேண்டும். அதற்காக தனக்கு ஒரு ஆண் பேரப்பிள்ளை கிடைக்கவேண்டும் என்பது பண்டாரநாயக்கவின் தந்தையின் ஆதங்கமானது. அதே போன்று பண்டாரநாயக்க பரம்பரையில் ஒரே ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அவர் அநுரா பண்டார நாயக்க ஆவார். எனினும் முதல் இரண்டு பிள்ளைகளும் (பேரப்பிள்ளைகள்) பெண்களாகப் பிறந்தமையினால் கவலையுற்ற அவர் தனக்குப் பேரன் பிறந்தால் மட்டுமே உயில் எழுதச் சம்மதிப்பதாக தெரிவித்தார். அவ்வாறு அநுரா பிறக்காதிருந்தால் ஹொரகொல்லவளவின் உரிமை பண்டார நாயக்க பரம்பரைக்குச் சென்றிருக்காது. தனது தந்தையின் விருப்பம் நிறைவேறியதற்காகவே அநுராவை செல்லமாக வளர்த்தார் பண்டாரநாயக்க. பண்டாரநாயக்க தமக்குப் பின்னர் மகன் அரசியலுக்கு வரவேண்டும் என்ற நோக்கில் அவருக்கு அரசியல் பற்றிப் பாடம் புகட்டினாரா? என்பது யாருக்கும் தெரியாத ஒன்று. எனினும் அவரின் தெரிவு அநுரா பண்டாரநாயக்க என்பதில் எவ்வித மாற்றமும் இருந்திருக்காது. தமக்குப் பின்னர் தனது மனைவி சிறிமாவோ நாட்டின் தலைவர் ஆவார் என்பதை அவர் கனவிலும் நினைந்திருக்கவில்லை. 1970-1977 காலப்பகுதியில் சிறிமாவை விட்டு விலகிய லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் என்.எம் பெரேரா அன்று கூறியபோது, பண்டார நாயக்க தனது வீட்டில் இருந்து அரசியல் சரிபிழைகளைக் கூறியபோது கூட சிறிமாவோ அவ்விடத்தில் இருக்கவில்லை என்று தெரிவித்தார். எனினும் பண்டாரநாயக்கவின் திடீர் மறைவிற்குப் பின் பெண்ணாதிக்கப் பரம்பரையின் கைகளுக்குள் நாட்டின் அரசியல் சென்று விட்டது. அதன் மூலம் பண்டார நாயக்க குடும்பத்தின் முதலாவது பெண்பிரதமர் என்ற சிறப்பையும், பெற்றுக்கொண்டார். அப்போது அவரை மகுடம் சூட்டிய நீண்ட கால அரசர் என்றும், அநுரா பண்டாரநாயக்க வளர்ந்து வரும் வரை அவர் பதவியில் இருப்பார் என்றே அனைவரும் எண்ணினர். எனினும் அவருக்குப் பின்னர் அவர் அநுராவுக்கு அன்றி சந்திரிகாவுக்கே மகுடம் சூட்டினார். அதனை பண்டார நாயக்க குடும்பத்துக்கு ரத்வத்த குடும்பம் இழைத்த அநீதி என்றே அநுரா நினைத்தார்.


பண்டார நாயக்க சிறிமாவோ சந்திரிகா

எவ்வாறாயினும் தற்போது சந்திரிகாவின் பதவிக்காலம் முற்றுப்பெறப் போகிறது. அவர் சொலமன் டயஸ் பரம்பரையிடம் அரசைக் கையளித்து விட்டுச்செல்வாரா என்பது உறுதியாகக் கூற முடியாது. எது நடந்தாலும் பண்டார நாயக்க பரம்பரையின் 5ஆவது வாரிசாக யாருமில்லை. பண்டார நாயக்க பரம்பரைக்கு பெயர்சொல்ல இனி உள்ளவர்களென்றால் சந்திரிகாவின் பிள்ளைகள் மட்டுமே. பண்டார நாயக்க பரம்பரையினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பொறுப்பேற்க வேண்டும் எனக் கட்சி நினைத்தால் சந்திரிகா சோனியா காந்தியைப் பின்பற்ற வேண்டும்.

ராஜீவ் காந்தியின் பரம்பரை ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதில் அவர் அக்கறை காட்டுகிறார். அதற்காகவே தமது பிள்ளைகளை அரசியலில் ஈடுபடுத்துகின்றார். அத்துடன் இந்திரா காங்கிரசின் தலைமையை ஏற்றுள்ளார். அதற்காக தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான நரசிம்மராவை பிரதமராக்கினார். கடந்த தேர்தலில் மன்மோகன் சிங்கிற்கு அன்றி சோனியாவுக்கே வெற்றி கிடைத்தது. தனது மக்களின் அரசியல் இலாபம் கருதியே அவர் பிரதமர் பதவியையும் விட்டுக்கொடுத்தார்

பின்பு ஒரு காலத்தில் எதிர்க்கட்சிகள் கூடி அரசைக் கவிழ்க்க முனைந்தால் தனது விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை நினைத்தாகினும் மக்கள் தனது பிள்ளைகளுக்கு ஆதரவாக வாக்களிப்பர் என்று சோனியா காந்தி நினைத்திருக்கலாம்.

அதே போன்று இன்று சந்திரிகாவும் பண்டார நாயக்க பரம்பரையின் உரிமையை பாதுகாப்பதற்காக அவ்வாறு செய்வது நல்லது. அல்லாவிடில் எவ்வாறாயினும் தான் அதிகாரத்தைப் பற்றிப்பிடித்திருக்க வேண்டுமென்று நினைத்தால் அது சாத் தியமாகாத பட்சத்தில் பண்டார நாயக்க குடும்பத்தை ஆபத்தில் கொண்டு போய் விட்டுவிடும் நிலையேற்படும்.

சந்திரிகாவின் பதவி முடிவுற்ற பின் அவர் கட்சித் தலைவியாக இருக்கக் கூடிய பின்னணியை உருவாக்கலாம். அத்துடன் 2005 ஆம் ஆண்டு சனாதிபதியாகவும் போட்டியிடலாம். எனினும் அதனை விரும்பும் யாராவது அவருக்கு நம்பிக்கையுடையவராக இருக்க வேண்டும். பண்டார நாயக்க குடும்பத்தவரின் 4 ஆவது வாரிசான அநுரா பண்டாரநாயக்கவைப் பொறுத்தவரையில் தனது பாட்டனாரால் எதிர்பார்க்கப்பட்ட அரசியல்வாதி எனக் கூற முடியாது. காரணம் தனது தந்தையான எஸ்.டபிள்யு ஆர்.டி பண்டார நாயக்கவினால் உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அவர் ஒரு காலம் புறக்கணித்து விட்டு பதவி மோகம் கொண்டு ஐ.தே.கட்சியுடன் இணைந்திருந்தமையாகும். தனக்கு தனது தாயாராலோ அல்லது கட்சியின் ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களாலோ அநீதி இழைக்கப்பட்டிருப்பினும் தனது பரம்பரையின் கௌரவத்தைக் காட்டிக் கொடுக்காமல் தொடர்ந்தும் அவர் கட்சிக்காகப் பாடுபட்டிருப் பின் தற்போது சந்திரிகா அதனை பெரிதுபடுத்தக் கூடியதாக இருக்கும்

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி செல்வாக்கிழந்தபோது அதன் காரண காரியங்களை ஆராய்ந்து தவறுகளை திருத்திக் கொண்டு கட்சிக்குத் தனித்து நின்று செல்வாக்கைப் பெற்றிருக்க வேண்டும் ஆயினும் தனது சககட்சி உறுப்பினர்கள் சிலரின் எதிர்ப்புக்கும் மத்தியில் அவர் அன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.கட்சிக்கும் பரம எதிரியான ஜே.வி.பி.யினருடன் கூட்டிணைந்தமையும் அவர் தனது கட்சிக்கு இழைத்த துரோகமாகும். காரணம் அநுராபண்டார நாயக்க விரும்பாதிருப் பின் ஜே.வி.பி கூட்டணி சாத்தியமற்றதாகியிருக்கும். அந்த வகையிலும் அவர் கட்சியில் ஒரு தகுதியீனராக தற்போது ஏனைய சிரேஷ்ட உறுப்பினர்களால் கருத இடமுண்டு.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உறுதியான பெரும்பான்மை ஆதரவு பெற்ற கட்சியாக அநுரா உருவாக்கத் தவறியமை ஒருபுறமிருக்க அவர் ஐ.தே.கட்சியை விட்டு வெளியேறிய பின்னர் கட்சிக்குள் இருந்த ஏனைய உறுப்பினர்கள் கட்சிக்காகப் பாடுபட்டதிலிருந்து எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை பெற எதிர்பார்த்திருக்கலாம்.

உதாரணமாக ரட்ண சிறி விக்கிரம நாயக்க, மைத்திரி பால சிறிசேன, மங்கள சமரவீர முக்கியமாக மகிந்த ராஜபக்ஷ போன்றோர் சந்திரிகாவின் பதவிக் காலம் முடிவடைந்ததும் தாமே சனாதிபதி வேட்பாளராக வரவேண்டுமென எண்ணியிருக்கலாம்.


அநுரா

எனவே சந்திரிகா தொடர்ந்தும் பதவியில் இருக்கக் கூடியவாறு அரசியல் அமைப்பை மாற்ற எடுக்கும் முயற்சி தோல்வியுறும்போது அவர் தனது தந்தையின் பரம்பரையான சொலமன் பரம்பரையிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பாரா? அல்லது கட்சிக்காகப் பாடுபட்ட யாராவது ஒரு சிரேஷ்ட உறுப்பினரிடம் ஒப்படைப்பாரா? என்பதை இனி வரும் காலங்கள் பதில் கூறும்.

---

## இந்திய மீன்பிடிப்படகுகளால் எமது வளங்கள் அழிக்கப்படுவதை தடைசெய்ய வேண்டும்

### மன்னார் அரசியல் துறைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

எமது தாயக கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் படகுகளில் வந்து எமது வளங்களை அழிக்கின்றார்கள். இதனால் எமது மீனவர்கள் மிகவும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இவர்களின் நடவடிக்கை தடை செய்ய வேண்டுமென்ன மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 3.00மணியளவில் மன்னார் கச்சேரியில் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் மாவட்ட கடற்றொழில் வளங்கள் தொடர்பாகக் கூட்டம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு கொழும்பிலுள்ள கடற்றொழில் நீரியல் வள அமைச்சரின் செயலாளர் மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை, கடற்புலிகளின் பொறுப்பாளர் நிலவன். கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (மி)

---

## பொதுக் கிணறு கையளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

மகாறம்பைக்குளத்தில் கெயர் நிறுவனத்தின் நிதியுதவியில் வவுனியா மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையத்தால் பொதுக்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பொதுக்கிணறு மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு மகாறம்பைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றது. (10)

## கடந்த வாரத்தில்

### 23.09.2004~29.09.2004

### 23

★இந்திய விமானப் படைக்குச் சொந்தமான "மிராஜ்2000" ரக போர் விமானம் ஒன்று பயிற்சியில் ஈடுபட்ட வேளை விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விழுந்து நொருங்கியது.

★பிராந்திய பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர விவகாரங்கள் குறித்து அமெரிக்க சனாதிபதி புஷ்சும் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும் நியூயோர்க்கிலுள்ள வோல் டோப் அஸ்ரோறியா ஹோட்டலில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

★ஈராக்கிய தேசிய பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரி ஒருவரை அமெரிக்க இராணுவத் தரப்பு கைது செய்துள்ளது.

### 24

★இந்தியாவின் மிகப் பிரபல்ஜமான அணு விஞ்ஞானி ராஜாராமண்ணா உயிரிழந்தார்.

★ஈராக்கில் வன்முறைகள் அதிகரித்து வருவதனால் திட்டமிட்டபடி சனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியாதென அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவிப்பு.

★சென்னை திருவல்லிக்கேணியிலிருந்து பத்திரிநாத் யாத்திரைக்காக சென்ற பஸ்ஜோர்சிமர் என்ற இடத்தில் 200 அடி பள்ளத்தில் விழுந்ததில் 15பேர் உயிரிழந்தனர்.

★பலஸ்தீன மக்களின் நல்வாழ்வுக்காக யசீர் அரபாத் தனது பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்று நியூயோர்க்கிலுள்ள பத்திரிகையாளர் மத்தியில் பேட்டியளித்தபோது அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின்பவல் கூறினார்.

### 25

★ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதில் 8பேர் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம்.



★அமெரிக்கா தலைமையிலான படைகள் இஸ்லாமிய நாடுகளில் சிக்கலையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. இது விரும்பத்தகாத ஒரு செயல் என பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் வோஷிங்டனில் நியூஸ்வீக் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

★ரஷ்யாவின் வடக்கு ஒஸ்ரியா மாகாணத்திலுள்ள பெஸ்லன் நகரப் பாடசாலையில் தீவிரவாதிகள் புகுந்து நடத்திய தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் களுக்கு இலங்கை நாணயப்படி 46 இலட்சம் ரூபா மதிப்பிலான மருந்துப் பொருட்களை இந்தியா வழங்கியுள்ளது.

### 26

★ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள சதார் நகரம் மீது அமெரிக்கப்படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டனர் 45 பேர் காயமடைந்தனர்.



சதார் நகரில்...

★ஹமாஸ் அமைப்பு முக்கிய உறுப்பினர் டீன்ஷேக்காலில் சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ்ஸில் வைத்து குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டார்.

★பங்களாதேஷில் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிட பங்களாதேஷிற்கு அதிகளவு நிதியுதவியை வழங்கும் உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் அறிக்கையொன்றை வெளியிட்டன.



★ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் தவறாகிவிட்டன என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் பி.பி.சி. நிறுவனத்துக்கு அளித்த பேட்டியொன்றில் ஒப்புக்கொண்டுள்ளார்.

### 27

★உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலின் 350 ஆவது வயதை முன்னிட்டு ஆக்ராவில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

★ஈராக்கின் வடபகுதி நகரான மொசூலில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலிலும் கெரில்லாக்கள் பயிற்சி நிலைய மொன்றின் மீதும் நடத்தப்பட்ட தாக்கு தலில் 3 ஈராக்கியர்கள் பலியானதுடன் 5பேர் காயமடைந்தனர்.

★எதென்சில் நடைபெற்றுவந்த பரா ஒலிம்பிக்கை பார்ப்பதற்காக கிறீஸின் மத்திய பகுதியிலுள்ள கமீனா வொர்லா நகரில் பாடசாலைச் சிறுவர்களுடன் சென்ற பஸ் ரக் ஒன்றுடன் மோதியதில் 7பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

★காஸாப் பகுதியில் வைத்து இஸ்ரேலிய அராபியரும், சி.என்.என். தொலைக்காட்சி நிருபர் ஒருவரும் இனந்தெரியாத ஆயுத பாணிகளால் கடத்தப்பட்டனர்.

★டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் கட்டடம் இடிந்து விழுந்து 5பேர் பலியானதுடன் 12 பேர் காயமடைந்தனர்.

★துருக்கிக்கான எண்ணெய் விநியோகம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் 2 ஆம் திகதி தகர்க்கப்பட்ட எண்ணெய் குழாய்களினால் எண்ணெய் விநியோகம் தடைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிப் பணிகளுக்கான 20ஆவது செயற்கைக்கோள் சீனாவினால் விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது சீனாவில் கான்சூமாகாணத்திலுள்ள ஜியுகுவான் செயற்கை கோள் ஏவு மையத்தில் இருந்து ஏவப்பட்டது.

★சீனாவில் பல்வேறு நகர்களில் 36 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. பொதுமக்கள் முன்னிலையில் அவர்களது குற்றச்சாட்டுக்கள் படிக்கப்பட்டு இத்தண்டனை வழங்கப்பட்டது.

### 28

★ஜோர்தானிய தீவிரவாதியான அபு முஸாப் அல்-சர்க்குவியின் ஆதரவாளர்களது புகலிடங்கள் மீது அமெரிக்கப் போர் விமானம் நடத்திய குண்டுத்தாக்குதலில் கட்டடம் ஒன்று நிர்மூலமாக்கப்பட்டதுடன் பல தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

★ஈராக்கின் தற்போதைய சூழலில் அங்கு நீதியானதொரு தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்று ஜோர்தானிய மன்னர் அப்துல்லா தொலைகாட்சி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்

★ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்ட இரு இத்தாலிய பெண் பணியாளர்களும் எகிப்தியர்களும் ஈராக்கியர்கள் சிலரும் விடுதலை செய்யப்பட்டனர்.

★நேபாளத்தில் மவோ தீவ்விரவாதிகள் மேற்கொண்டுள்ள ஹர்த்தாலினால் பொருளாதார இறையாண்மைக்கான ஆசிய மக்கள் பேரணி நிகழ்ச்சியை முன்னிட்டு தெற்கு ஆசிய நாடுகளிற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பொக்ராவில் இருந்து காத்மண்டுக்கு வந்தவர்களின் இரண்டு ஜீப்புக்கள் தீவிரவாதிகளால் தீக்கிரையாக்கப்பட்டது.

★தமிழகத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி இடைத்தேர்தலில் தி.மு.க பெரும் பாலான இடங்களில் வெற்றி பெற்றது.

### 29

★அணுத்திட்டங்களை நிறுத்துவதற்கு ஈரானையும், வடகொரியாவையும் இணங்க வைப்பதற்கு சர்வதேச சமூகம் முன்னெப்போதும் இல்லாதவரை நெருங்கிவந்துள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிப்பிளேயர் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

★நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் தீவிரவாதிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 16 தீவிரவாதிகள் கொலைசெய்யப்பட்டனர்.

★மொசாட் உளவுப்பிரிவுடன் சம்பந்தமுடையதாகச் சந்தேகிக்கப்பட்ட நியூசிலாந்து கடவுச்சீட்டு மோசடியில் சிறை வைக்கப்பட்டிருந்த இரண்டு இஸ்ரேலியர்களை நாடுகடத்தியிருப்பதாக அந்த நாட்டுப் பிரதமர் ஹெலன் கிளரர்க் தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் முக்கிய தென்புறத் தீவான கயூசிலில் மீண்டும் பயங்கர சூறாவளி தாக்குதலினால் ஆயிரக்கணக்கானோர் வெளியேறியுள்ளனர்.



சூறாவளி

# தமிழகத்திலிருந்து இருநாட்களில் 16 பேர் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

தமிழகத்திலிருந்து கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் 16 ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் திருவாதவூர் அகதி முகாமில் வசித்த 9 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகுமூலம் தலைமன்னார் வந்தடைந்தனர். இவர்கள் தலைமன்னாரில் பியர் சிறிலங்காக் கடற்படையினரிடம் சரணடைந்தபோது இவர்களை தலை மன்னார் பொலிசார் மன்னார் விசேட நீதிமன்றத்தில் முன்நிறுத்தினர். மன்னார் நீதிபதி அப்துல்லா அவர்களது சொந்த இடமான திருகோணமலை, வவுனியா, ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டார்.

இதேபோன்று தமிழ் நாட்டில் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அகதி முகாமில் வசித்த 07 பேர் கடந்த வெள்ளியன்று தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் 05 ஆண்களும், 02 பெண்களும் அடங்குவர்.

இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகு மூலம் பேசாலை கடற்கரைக்கு வந்து இவர்கள் சுயமாகத் தமது இடங்களுக்குச் செல்ல முயன்றபோதிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தியமையால் சொந்த இடங்களுக்கு அவர்கள் செல்லாமல் பின்னர் சாவற்கட்டு கிராம அலுவலர் ஊடாக மாவட்ட சுகாதார வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சொந்த இடமான மாந்தை மேற்கு, ஆத்திமோட்டை, கூராய் போன்ற கிராமங்களிற்கு சென்றனர். (மி)

# பாடசாலை மாணவர்களுக்கு இலவச பால் விநியோகம்

திருகோணமலை நலன்புரிச் சங்கம்-கனடா என்ற அமைப்பின் நிதியுதவியுடன் திருகோணமலை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம், திருமலை மாவட்டத்தில் மீளக்குடியமரும் திரியாய்க் கிராமத்தில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பால் விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை சர்வதேச சிறுவர் தினமான வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது.


வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம் மாணவன் ஒருவனுக்குப் பாலை வழங்கித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

திரியாய் பாடசாலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனும் பங்கு பற்றினார். (25)

# வவுனியாவில் 9,722 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றன

வவுனியா மாவட்டத்தில் 9,722 சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக வவுனியா சமுர்த்திக் காரியாலயம் தெரிவிக்கின்றது. வவுனியாப் பிரதேசச் செயலாளர் பிரிவில் 5835 குடும்பங்களும், வவுனியா தெற்குப்பிரதேச செயலாளர் பிரிவில் 1218குடும்பங்களும், வெங்களச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் 2669 குடும்பங்களும் சமுர்த்தி நிவாரணம் பெறுவதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது.

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் 2003ஆம் ஆண்டு நிவாரணம் பெற்றவர்கள் யாரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



வடிகால்கள் அமைக்கப்படாமையினால் மழைநீர் வீதியினை ஊடறுத்துப் பாய்வதன் காரணமாக வீதிகள் சேதமுற்று வருகின்றமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழைகாரணமாக மழைவெள்ளம் கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியினை குறுக்கறுத்துப் பாய்வதனைப் படத்தில் காணலாம். (படம்:- சோ,கு)

# வாக்களிக்க தே.அடையாளஅட்டை கட்டாயம்; இ.தொ.கா.வின் யோசனை புறக்கணிப்பு!

## சட்டத்தை விரைந்து அமுல்படுத்த அரசு முயற்சி

(கொழும்பு)

வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயம் சட்ட மூலம் தொடர்பில் அரசுக்கும், இ.தொ.காங்கிரசுக்குமிடையில் பலத்த கருத்து வேறுபாடு தோன்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மேற்படி சட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்போது தம்மால் முன்வைக்கப்பட்ட மாற்றங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென இ.தொ. காங்கிரஸ் கூறியிருப்பதாகவும், எனினும் அதில் எவ்வித மாற்றமும் செய்யாது மக்கள் கருத்தையும் அறியாது உடனடியாக சட்டத்தை அமுல் செய்வதற்கு அரசு முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது.

தம்மால் யோசனை கூறப்பட்ட விடயங்களை சட்ட மூலத்தில் சேர்த்துக் கொள்ளாத பட்சத்தில் அரசுக்கு அளிக்கும் ஆதரவை மீளப் பெறுவதாகத் தெரிவிக்கும் இ.தொ.கா., அரசில் தமது கட்சி ஒரு அங்கம் என்பதால் அரசு அவ்வாறு செய்யாது என கட்சியின் உறுப்பினர் யோகராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த சட்டத்தின் மூலம் சிறுபான்மை இனத்தவரின் மனித உரிமைகள் பறிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் பிரதி பிரதம செயலர் அத்தநாயக்க தெரிவிக்கும்போது நாட்டில் அனைவரும் அடையாள அட்டை பெற்ற பின்பு இந்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவது நன்று எனத் தெரிவித்தார்.

எனினும், அரசு இச்சட்ட மூலத்தை மாற்றங்களுடனேயே சமர்ப்பிக்குமெனபதில் கட்சி அமைப்பாளர் தி.மு. ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# சனாதிபதி பதவியேற்று 10 வருட பூர்த்தி ஒரு மாதம் கொண்டாட ஏற்பாடு

(கொழும்பு)

சந்திரிகா சனாதிபதியாகப் பதவியேற்ற 10ஆவது வருடத்தை மிக விமர்சையாக அவர் கொண்டாடவிருப்பதால் நவம்பர் 12 முதல் டிசம்பர் 12 முடிவடையும் விதமாக தொடர்கொண்டாட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

நவம்பர் 11ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சனாதிபதிக்கான ராஜமரியாதை இடம்பெறுவதுடன் அதன்பின்னர் மாகாண, மாவட்ட மட்டங்களில் நவம்பர் 12 முதல் டிசம்பர் 11 வரை விழாக்களை நடாத்தி டிசம்பர் 12ஆம் திகதி இறுதி நிகழ்வாக கொழும்பில் நிறைவுவிழாவை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விபரம் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன அனைத்து மாகாண எம்பிக்களுக்கும் அறிவித்துள்ளதுடன் இதற்கான கலந்துரையாடலை இம்மாதம் 9ஆம் திகதி மாத்தறை சனாதிபதி வித்தியாலயத்தில் நடத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# இனவாதக் கட்சிகள் இணைந்தஅரசு நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச்செல்கிறது

## - கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதுடன் கிராமப்புற மக்களையும் சமாதானத்துடன் இணைத்து அனைவரும் ஒன்று சேர்ந்து உண்மையான அமைதியை ஏற்படுத்த முனைய வேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் சமாதான முயற்சியில் காலத்தை வீணடிப்பதாகத் தெரிவித்த அவர், இனவாதக் கட்சிகளோடு சேர்ந்து நாட்டை மோசமான நிலைக்கு இட்டுச் செல்வதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். சமாதானப் பேச்சுக்கள் மனப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அவர் அதனை ஏற்படுத்த அனைவரும் ஒன்று திரளவேண்டும் எனவும் கோரியுள்ளார். விலைவாசி உயர்வு மற்றும் சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்து கோட்டைப் புகையிரத நிலைய முன்றலில் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இடதுசாரி முன்னணியின் ஆர்ப்பாட்டத்தின் பின் வழங்கிய விசேட செவ்வியில்,இலங்கையில் சமாதானம் மிகவும் அவசியமானது எனத் தெரிவித்துள்ள கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியும் தனது ஆட்சியில் சமாதானத்திற்காக முழுமனதுடன் செயற்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 97 சதவீத போதைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து எடுத்துவருகை!

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்தி வரப்படும் போதைப் பொருட்களில் 97சதவீதமானவை இந்தியாவிலிருந்து கடத்தி வரப்படுவதாக போதைப் பொருள்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பூஜித ஜெயசுந்தர கூறுகின்றார். இவரது தகவலின் படி போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்பு நாட்டிற்குள் போதைப் பொருள் கடத்தும் கேந்திர மையங்களாக வடமேல் மற்றும் மேல்மாகாண கடற் பிரதேசங்கள் இருந்ததாகவும், தற்போது மன்னார் கேந்திர நிலையமாக மாறியுள்ளதாகவும்தெரிய வந்துள்ளது.

1997ஆம் ஆண்டு இலங்கைக்கு இந்தியாவிலிருந்து 28 சதவீதமான போதைப் பொருள் கொண்டுவரப்பட்டது. 1999 இல் இது 79 சதவீதமாக உயர்ந்து தற்போது 97 சதவீதமாக உயர்ந்துள்ளது என்ற தகவலையும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் வெளியிட்டுள்ளார்.

# பயணியின் மூக்கை அறுத்த நடத்துனர் விளக்கமறியலில்

(கொழும்பு)

பயணியின் மூக்கை அறுத்த பேருந்து நடத்துனர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

சென்ற புதன் கொழும்பில் இருந்து பாணந்துறை நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த குறித்த பயணியான இளைஞர் பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் தான் இறங்க விரும்புவதாக தெரிவித்ததையடுத்து பேருந்தின் நடத்துனர் இருவருக்கும் மற்றும் இவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து நடத்துனரில் ஒருவர் கூரிய கத்தியொன்றினால் இவரது மூக்கை அறுத்துவிட்டார்.இதனால் படுகாயம் அடைந்த இளைஞன் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டா.

மூக்கை அறுத்த நடத்துனர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பாணந்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கோதுமை மாவின் விலை அதிகரிக்கும்

கோதுமை மாவின் விலையை கிலோ ஒன்றுக்கு 35 சதத்தால் அதிகரிப்பதற்கு பிறிமா நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

டீசலின் விலையுயர்வு காரணமாக கோதுமை மாவை விநியோகம் செய்யும் பார ஊர்திகளின் கட்டணங்களில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பை சமாளிப்பதற்காகவே இந்த விலையுயர்வை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)

துறைமுக, விமான, ஊடகத் தகவல்கள்அமைச்சரும், பிரதிக் கல்வி அமைச்சருமான மங்கள சமரவீர சனாதிபதியினால் யுனஸ்கோவின் நிறை வேற்று சபைக்கு 2007வரை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று பாரிசில் நடைபெறும் யுனஸ்கோவின் கூட்டத்தொடருக் கான குழுவினருக்குத் தலைமை தாங்கவுள்ளார்.


## விற்பனைக்கு

வவுனியா பூந்தோட்டப் பகுதியில் நான்கு பரப்புக் கொண்ட மேட்டுத் துண்டுக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு
024 4589416
077 6321271
077 6145316 (சி-10419)


# பெருந்தெருக்கள் அபிவிருத்தி திட்டத்தில் பெரும் மோசடி!

## - அமெரிக்க ஆய்வாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

90 மில்லியன் டொலர் செலவில் மேற்கொள்ளப்படுகின்ற பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டத்தில் பெருமளவு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.தென்பகுதியில் பெருந்தெருக்கள் அமைக்கப்படுவது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டம் தொடர்பில் பெருமளவு மோசடி இடம் பெற்றுள்ளதாக அமெரிக்க ஆளுனர் ரிச்சார்ட் லுகர் சுட்டிக்காட்டியுள்ளார்.தாய்லாந்தில் நீர் முகாமைத்துவத்திட்டமும்,இலங்கையின் பெருந்தெருக்கள் அபிவிருத்தித் திட்டமும், மிக அதிகளவு மோசடிகள் கொண்டவை என்று அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் அலுவலகத்துடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள ஒப்பந்தகாரர் ஒருவருக்கே இந்தத் திட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## - 2கோடி ரூபா பெறுமதியான -

# போதைப் பொருட்களுடன் சிங்களப் பெண் கைது

இலங்கையில் இருந்து தமது கையுறைக்குள்ளும் பொதியிலும் மறைத்து குவைத் நாட்டிற்குக் கொண்டு செல்ல எத்தனிக்கப்பட்ட பெருமளவு ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தில் இடம் பெற்றுள்ளது. பெண் ஒருவர் இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார். இவரின கையுறைக்குள்ளும், பையின் அடிப்பாகத்திலும் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் ஒன்றரைக்கிலோ ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றிய சுங்க இலாகாப் பிரிவினர், அதன் பெறுமதி 40 இலட்சம் ரூபா என மதிப்பிட்டுள்ளனர். அதேநேரம் குறிப்பிட்ட பெண் போதைப் பொருள் என நம்பப்படும் சுமார் 1 கிலோகிராம் வில்லைகளைத் தமது கையுறைக்குள்ளும், இன்னும் ஒன்றரைக் கிலோக்கிராம் பவுடர்பைகளை பொதியின் அடிப்பாகத்திலும் மறைத்துக் கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண் குவைத்துக்கு எடுத்துச்சென்ற போதைப் பொருட்களின் மொத்தப் பெறுமதி இரண்டு கோடி ரூபாவுக்கு மேலாகும். வேறொரு சிங்களவர் தம்மிடம் இந்தப் போதைப் பொருட்களை கொண்டு வந்து குவைத்தில் தருமாறு கூறியதாக கைது செய்யப்பட்டுள்ள சிங்களப் பெண்ணான இவர் சுங்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். இதே வேளை இலங்கையில் இருந்து வெளிநாடு ஒன்றுக்கு இவ்வளவு பெரிய அளவில் போதைப் பொருள் கொண்டு செல்லப்பட்டமை இதுவே முதற் தடவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அதிகாரி தாக்கப்பட்டதை ஆராய ம.உ ஆணைக்குழு விசேட கூட்டம்!

மனித உரிமை ஆணைக்குழுவினரின் விசேட கூட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது. வடக்கு, கிழக்கு மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளின் கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் மனித உரிமை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மனிதவுரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2004ஆம் ஆண்டுக்கான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது கல்வி நிலைய மாணவி செல்வி பாலேஸ்வரன் விநோஜா அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
புதிய கலைக்கல்லூரி (NAC)
பாண்டியன் குளம் (4136)

## பணிநிலை வேண்டுகை

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணிநிலைகளுக்கு பெண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன.

**பணிநிலை 01:-கணக்காளர்**

கல்வித்தகைமை :-பட்டதாரி வணிகம்
வேதனம் :- பட்டதாரிகளுக்குரிய வேதனம் வழங்கப்படும்.

**பணிநிலை 02:-மொழிபெயர்ப்பாளர்**

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்புச் செய்யவேண்டும்.

சம்பளம் :-பேசித்தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதிநாள்:-15.10.2004.

முகவரி-விளம்பரம்-10,
ஈழநாதம்,
கிளிநொச்சி.

(5146)

# - இந்தியாவின் நாகலாந்து, அசாம் மாநிலங்களில் -
# தீவிரவாதிகளின் குண்டு வெடிப்புத்தாக்குதல்களில்
# சிறுவர்,பெண்கள் உட்பட 64 பேர் பலி, 128 பேர் காயம்

(புதுடில்லி)

**இந்தியாவின் நாகலாந்து மற்றும் அசாம் மாநிலங்களில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பாடசாலைச் சிறுவர், சிறுமியர், பெண்கள் உட்பட 64 பேர் உயிரிழந்துள்ளதோடு மூன்று பொலிசார் உட்பட 128 பேர் காயமடைந்துள்ளனர்.**

நாகலாந்தில் ரயில் நிலையம் மற்றும் சந்தையில் குண்டு வெடித்து 47பேர் பலியானார்கள். காந்தி ஜெயந்தி அன்று நேற்று முன்தினம் தீவிர வாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காலை 9.30மணியளவில் ரயில்வே பிளாட்பாரத்தில் சக்தி வாய்ந்த குண்டுவெடித்தது. இதில் ரெயிலுக்கு காத்திருந்த பெண்கள், பள்ளிக் குழந்தைகள் உட்பட 20 பயணிகள் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியாயினர். 60இற்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

இதேநேரம் திம்பூரில் ஹொங்கொங் சந்தையில் மற்றொரு குண்டு வெடித்தது. இதில் 15 பேர் பலியாகினர். 40இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட 12பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

தகவல் அறிந்தவுடன் நாகலாந்து முதல்வர் நேபியுரியோ தலைநகர் கொஹிமாவில் இருந்து தீம்பூர் நகருக்கு விரைந்து வந்தார். அங்கு அவர் நிருபர்களிடம் கூறுகையில், இந்தச் சம்பவத்திற்கு பின்னணியில் இருப்பவர்களைக் கண்டுபிடிக்க உயர்மட்ட விசாரணைக்கு உத்தர விட்டு இருப்பதாகக் கூறினார்.

அசாம் மாநிலத்தில் தீவிரவாதிகள் 9 இடங்களில் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சுச் சம்பவங்களில் 17பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 3பொலிசார் உட்பட 40பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. அசாம் மாநிலம் சிரங் மாவட்டத்தில் பிஷ்னுபூர் நகரக் கடைத்தெருவில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் தீவிரவாதிகள் குண்டு வீசினார்கள். அந்தக் குண்டு வெடித்துச் சிதறியதால் ஒரு கடைக்காரர் உட்பட 11 பேர் பலியானார்கள். 4பேர் காயம் அடைந்தார்கள். காயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேலும் எட்டு இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய வெடி குண்டு வீச்சுச் சம்பவங்களில் 6பேர் இறந்ததார்கள். 36பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 3பேர் பொலிஸ்காரர்கள், .மூத்தபொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.




## 300 கி.மீ நெடுஞ்சாலையில் 113 பெற்றோல் நிரப்பு நிலையங்கள்

(புதுடில்லி)

இந்தியாவின் தேசிய நெடுஞ்சாலைகளில் 300 கிலோமீற்றர் இடைவெளியில் நாடு முழுவதும் 113 பெற்றோல் நிரப்பு நிலையங்கள் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் திறக்கப்படும் என்று இந்திய எண்ணெய்க் கழகம் திட்டமிட்டுள்ளது.

இதற்கு 1600 கோடி ரூபா முதலீடு செய்யப்படும் என்றும் தமிழ் நாட்டில் மட்டும் 9 புதிய நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் இந்திய எண்ணெய் கழகத்தின் இயக்குனர் என்.ஜி கண்ணன் கூறியுள்ளார். ஈரோட்டில் பெரும் துறையருகே முதல் பெற்றோல் நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. தரமான எண்ணெய் வாகன உதிரிப்பாகங்கள், மருத்துவ வசதிகள், உணவுமற்றும் சிற்றுண்டி மையங்கள், ஓய்வறைகள், தொலைபேசி மையங்கள், தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட பொழுதுபோக்கு அம்சங்கள் என்பன உள்ளிட்ட 38 வகையான வசதிகள் இந்தப் பெற்றோல் நிலையத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளையடைய உலகவங்கியின் உதவி உந்துதலாக அமையும்

### - இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம

(புதுடில்லி)

2015 ஆம் ஆண்டளவில் எட்டப்படும் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டவைகளை அடைய உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் உதவி பெரிய உந்து சக்தியாக இருக்கும் என்று மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வோஷிங்டனில் உலக வங்கி மற்றும் சர்வ தேச நிதி நிறுவனத்தின் மேம்பாட்டுக் குழுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் இந்த நிதியுதவி வர்த்தகத்தை விரிவு படுத்தவும், தனியார் முதலீட்டை அதிகரிக்கவும், நாடுகளின் திறமைகளை வளர்க்கவும் பயன்படும் என்று கூறியுள்ளார்.

கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய மனிதநேயத்துடனான பொருளாதார சீர்திருத்தத்துடனான குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கச்சா எண்ணெய் விலை கூடிய போதும் ஆண்டுப் பொருளாதார வளர்ச்சி வீதம் ஏழு சதவீதம் இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## பார்வையற்றோர் வாக்களிக்க வசதி

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில்உள்ள ஆசிப் நகர் தொகுதியில் இடைத்தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தலில் பார்வையற்றோர் ஓட்டுப் போட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் புதிய வசதி செய்யப்பட்டுள்ளது. இதன்படி மின்னணு இயந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர்கள் பிரெய்லி' முறைப்படி எழுதப்பட்டிருக்கிறது.இதனால் பார்வையற்றோர், வேறு யாருடைய உதவியும் இல்லாமல் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யலாம்

## குளோனிங் முறையில் மனித உறுப்புக்களை தயாரிக்க அப்துல் கலாம் ஆதரவு

(புதுடில்லி)

குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்கும் முயற்சிக்கு இந்திய சனாதிபதி அப்துல் கலாம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அதேசமயம் இதயம், கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல் போன்ற முக்கியமான மனித உறுப்புகளைக் குளோனிங் மூலம் உருவாக்கும் முயற்சிக்கு அவர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

சென்னையில் சர்வதேச உயிரியல் மருத்துவ அறிவியல் தொழில்நுட்ப மையத்தை திறந்துவைத்துப் பேசிய அவர் இவ்வாறு கூறியுள்ளார். மாற்று இதய அறுவைச் சிகிச்சைக்கு குளோனிங் முறையில் உருவாக்கப்படும் இதயம் பயனுடையதாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## திண்டுக்கல்லில் விபத்து 6பேர் சம்பவ இடத்தில் பலி

திண்டுக்கல் அருகே பாரஊர்தியும் குவாலிஸ் காரும்,நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சென்னையைச் சேர்ந்த 6 பேர் சம்பவ இடத்திலேயே நசுங்கிப் பரிதாபமாக இறந்துள்ளனர்.திண்டுக்கல் அருகே செட்டி நாயக்கன்பட்டிக்கு அருகில் உள்ள அரச போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் முன்பாக நேற்று முன்தினம் அதிகாலையில் இந்த சம்பவம் இடம் பெற்றது. இதில் குவாலிஸ் கார் நொருங்கி உருக்குலைந்து போயுள்ளது.

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு கொள்கையளவில் முதலில் ஒப்புதலளித்தது தே.ச. கூட்டணியே

### - வெங்கையா நாயுடு தெரிவிப்பு

(புதுடில்லி)

சேது சமுத்திரத் திட்டத்திற்குக் கொள்கையளவில் முதலில் ஒப்புதல் அளித்தது வாஜ்பாய் தலைமையிலான தேசிய சனநாயகக் கூட்டணி அரசு தான் என்று பாரதிய ஜனதாவின் தலைவர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்க்கட்சித் தலைவர்களைக் குறிப்பாக பாரதிய ஜனதாத் தலைவர்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு முக்கியத்துவம் அளிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மத்தியில் ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகளால் அரசுக்கு வருவாய் மற்றும் நிதிப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது என்றும், பணவீக்க விகிதம் அதிகரித்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியிலிருந்து ஜெயலலிதா இனிமேல் மீளமுடியாது

### - வை.கோ. தெரிவிப்பு

உள்ளாட்சி இடைத்தேர்தலில் அ.தி.மு.க. பணம், கள்ளவாக்கு அதிகார பலத்தில் வெற்றி பெறலாம். நாடாளுமன்றத் தேர்தல் வீழ்ச்சியில் இருந்து இனிமேல் ஜெயலலிதா எழவே முடியாது என்று வை.கோ கூறினார்.

உள்ளாட்சி இடைத்தேர்தலில் ஆளும் கட்சி அ.தி.மு.க. அதிகார துஷ்பிரயோகம் செய்தது. பெரும் பணத்தை வாரி இறைத்து, கள்ள வாக்கு போட்டு வன்முறை வெறியாட்டம் நடத்தினர். சென்னை, திருமங்கலம் போன்ற இடங்களில் இந்த அராஜகம் நடந்தது. மேலும் உள்ளூர் பிரச்சினைகளும் தேர்தல் முடிவை நிர்ணயித்தன. மக்கள் ஜெயலலிதாவை ஏற்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சியில் இருந்து எழ முடியும் என்று ஜெயலலிதா நினைத்தால் ஏமாருவார். தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் சனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஏற்பட்ட அதே வெற்றி சட்டமன்றத் தேர்தலிலும் நிச்சயம் பெறும்.

அவரது ஆட்சியில் தமிழக மக்கள் சொர்க்கத்தில் இருப்பதாகக் கூறி உள்ளார். 99 சதவீத மக்கள் வேதனையில் வாழ்வதை நான் மறுமலர்ச்சி நடைப்பயணத்தில் நேரிடையாகக் கண்டேன். மக்கள் படும் வேதனை என் மனதில் காயமாக உள்ளது. ஜெயலலிதா முட்டாள்களின் சொர்க்கத்தில் உள்ளார் என வை.கோ.மேலும் கூறியுள்ளார்.

## அருணாசலப் பிரதேச தேர்தலில் எங்களுக்கு வெற்றிகிடைக்காது

### –பாரதிய ஜனதா சொல்கிறது

"அருணாசல பிரதேச சட்டசபைத் தேர்தலில் தங்களுக்கு வெற்றி கிடைக்காது" என்று பாரதிய ஜனதா கணித்துள்ளது.

தேர்தலுக்கு இன்னும் ஐந்து நாட்களே உள்ள நிலையில் அருணாசலப் பிரதேச மாநில பா.ஜனதாக்கட்சியின் தேர்தல் பொறுப்பாளர் சுவாமி சிம்மயானந்தா இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். நிருபர்களுக்குப் பேட்டியளித்த அவர் மேலும் கூறியதாவது: "இந்த மாநில முதல்-மந்திரி ஜிகாங் அபாங் தன்னுடைய ஆதரவாளர்கள் அனைவருடன் பா.ஜனதாவை விட்டு விலகி கடந்த மாதம் காங்கிரசில் இணைந்து விட்டார். இதனால் எங்களுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது வேட்பாளர்கள் இல்லை.

மொத்தம் உள்ள 60 தொகுதிகளிலும் எங்களால் வேட்பாளர்களை நிறுத்த முடியவில்லை. 38 தொகுதிகளில் மட்டுமே பா.ஜனதா போட்டியிடுகிறது. அதிலும் ஒரு தொகுதி வேட்பாளர் கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகி விட்டார். முதல்-மந்திரி ஜிகாங் அபாங் விலகியிருக்காவிட்டால் பா.ஜனதா பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை மீண்டும் கைப்பற்றியிருக்கும். கடந்தபாராளுமன்றத் தேர்தலில் இரு தொகுதிகளிலும் அதிக மெஜாரிட்டியுடனும் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம் என்றார்.

## 'பாக்டெல்' முக்கோண ஒருநாள் போட்டி

# பாகிஸ்தானுக்கு இரண்டாவது வெற்றி



பாக்டெல் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுக்களால் சிம்பாப்வே அணியை தோற்கடித்தது. முன்னதாக துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்று பிரமிக்க வைத்தது.

துடுப்பாட்டத்தில் பிரண்டன் ரெயிலர் 73 ஓட்டங்களையும், மக்சிக் கனெரி41 ஓட்டங்களையும், இப்ரகிம்71 ஓட்டங்களையும், தைபு 46 ஓட்டங்களையும் முறையே ஆட்டமிழக்காது பெற்றனர்.

பந்து வீச்சில் நவீட்உல்ஹசன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு 253 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பாகிஸ்தான் சொற்ப ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து நெருக்கடிக்கு உள்ளான போதும் சொகைப் மாலிக், யுனிஸ்கான் ஆகியோரின் சிறப்புத் துடுப்பாட்டத்தால் 48.1 ஓவரில் 258 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

துடுப்பாட்டத்தில் மாலிக் 80 ஓட்டங்களையும், யுனிஸ்கான் ஆட்டமிழக்காது 77 ஓட்டங்களையும் பெற்றனர். சல்மான்புட் 30 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பன்னியங்கார 26 ஓட்டங்களைக் கொடுத்து 3விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இத் தொடரின் மூன்றாவது போட்டி நாளை மறுதினம் சிறிலங்கா பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெறவுள்ளது.



# பயிற்சி ஆட்டத்தில் வீரர்களின் திறமை மகிழ்ச்சியளிக்கும் விதத்தில் உள்ளது

**கில்கிறிஸ்ட்**



ரஞ்சிக் கோப்பை சம்பியனான மும்பை அணிக்கு எதிராக அவுஸ்திரேலிய வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. முதல் இன்னிங்சில் ஹைடனும், மார்ட்டினும், 2-ஆவது இன்னிங்சில் லாங்கரும் அபாரமாக ஆடினார்கள், சுழற்பந்து வீச்சைச் சரியாக கணித்து விளையாடினார்கள். எங்களது துடுப்பாட்ட வரிசை சுழற்பந்து வீச்சை எதிர்கொண்டு ஆடுவதில் சிறந்தவர்கள். இதனால் டெஸ்ட் தொடரில் இந்திய வீரர்களின் சுழற்பந்து வீச்சைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். கும்ப்ளே, ஹாபஜன் சிங் ஆகியோரது சவாலைத் சந்திக்க தயாராகி விட்டோம் என அவுஸ் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் பயிற்சி ஆட்டத்தில் வீரர்களின் திறமை மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. மெக்ராத், பெர்ட்லீ ஆகியோர் சிறப்பாகப் பந்து வீசினார்கள். இளம் வீரரான கிளார்க் நன்றாக ஆடுகிறார். இதுவரை அவர் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை. ரிக்கிபொண்டிங்கின் இடத்தை அவர் சரி செய்வார். அவுஸ்திரேலியா தற்போது துடுப்பாட்டம், பந்து வீச்சு ஆகியவற்றில் சமநிலை பெற்றிருக்கிறது என்றார்.

# 'சுழல் பயமில்லை' மார் தட்டுகிறார் மார்ட்டின்



இந்தியாவுக்கு எதிரான டெஸ்தொடரில் புதிய அணுகுமுறையைக் கையாளப் போவதாக அவுஸ்திரேலியாவின் இடைநிலை ஆட்டக்காரர் மார்ட்டின் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

"கடந்த முறை சுழலுக்கு நாங்கள் தடுமாறியதை வைத்து இப்போது ஒரு முடிவுக்கு வர வேண்டாம். இப்போதெல்லாம் நாங்கள் நிறையப் போட்டிகளில் விளையாடுகிறோம். எந்த ஆடுகளங்களிலும் சிறப்பாக விளையாடும் அளவுக்கு எங்கள் ஆட்டத்திறனை மேம்படுத்தி வைத்திருக்கிறோம். கடந்த ஆண்டு இங்கு நடந்த ஒரு நாள் தொடரை வென்றிருக்கிறோம். அது எங்களுக்குக் கூடுதல் தன்னம்பிக்கை அளித்திருக்கிறது. இந்திய சுழற்பந்துகளைச் சமாளிக்க இம்முறை புதிய அணுகுமுறையைப் பின்பற்றப் போகிறோம். மாறுபட்ட ஒரு ஆட்டத்தை இந்தத் தொடரில் நீங்கள் காணலாம்" என்றார்.

# சர்வதேச மினி மரதன் போட்டி
# கென்ய வீரர் பவுல் கிருய் முதலிடம்

13-ஆவது உலக மினி மரதன் போட்டி டில்லியில் நேற்று நடந்தது. ஆசியாவில் முதல் முறையாக நடைபெறும் இந்த மரதன் பந்தயத்தைப் பிரதமர் மன்மோகன்சிங் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

62 நாடுகளில் இருந்து 300 இற்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இதில் கலந்து கொண்டனர். பந்தயத் தூரம் 21 கிலோ மீற்றர் ஆகும்.


முதலில் ஆண்களுக்கான மரதன் பந்தயம் நடந்தது. இதில் கென்ய வீரர் பவுல் கிருய் வெற்றி பெற்றார். பந்தயத் தூரத்தை அவர் ஒரு மணி 2 நிமிடம் 15 வினாடிகளில் கடந்தார்.

தான்சானியா வீரர் யோசப் ஒரு மணி 2 நிமிடம் 31 வினாடிகளில் கடந்து 2-ஆவது இடத்தையும், கத்தார் வீரர் அப்துல்லா அகமது ஒரு மணி 2 நிமிடம் 36 வினாடிகளில் கடந்து 3-ஆவது இடத்தையும் பிடித்தனர்.

பெண்கள் பிரிவில் சீன வீராங்கனை சன் முதல் இடத்தைப் பிடித்தார். பந்தயத் தூரத்தை ஒரு மணி 8 நிமிடம் 40 வினாடிகளில் கடந்தார்.

கென்ய வீராங்கனை லைடியா ஒரு மணி 9 நிமிடங்களில் கடந்து 2-ஆவது இடத்தையும், ருமேனியாவைச் சேர்ந்த கான்ஸ்டான்டினா ஒரு மணி 9 நிமிடம் 7 வினாடிகளில் கடந்து 3-ஆவது இடத்தையும் பிடித்தனர்.

**13வது உலக 'பாதி' மாரத்தான்**
**டில்லி**
**ஞாயிறு, அக்டோபர் 3, 2004**




# நாசர்ஹுசைனின் குற்றச்சாட்டுக்கு மனம் வருந்தும் டிம் லாம்ப்




அண்மையில் இங்கிலாந்து கிரிக்கெட்டின் முன்னாள் அணித் தலைவர் நாசர் ஹுசைன் தன் மீது குற்றம் சாட்டியிருந்தமைக்கு முன்னாள் இங்கிலாந்து, வேல்ஸ் கிரிக்கெட் சபை நிறைவேற்றதிகாரி டிம் லாம்ப் தனது வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

1987ஆம் ஆண்டிலிருந்து நன்றாகப் பரிச்சியமான ஹுசைனிடம் கொண்டிருந்த நட்பு இதன் மூலம் பிளவுபட்டுள்ளதாகவும் அவரின் இங்கிலாந்து கிரிக்கெட் சபை மீதான குற்றச்சாட்டு இங்கிலாந்து வீரர்களுக்கு விருது வழங்குவதைக் கேள்விக்குள்ளாக்கியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். விருது வாங்குவோரின் மகிழ்ச்சியையும், மக்களின் ஆதரவையும், துணிவையும் ஒரு வீரர் இழக்க நேரிடுகிறது என்று அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

## சந்திரோதயா வி.கழகம் நடாத்திய

# மாவீரர் வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டிகள்
# விக்கினேஸ்வரா இளந்தென்றல் அணிகள் சம்பியன்

உருத்திரபுரம் கிழக்கு சந்திரோதயா விளையாட்டுக் கழகம் பிரதேச மாவீரர்கள் நினைவாக நடாத்திய மாவீரர் வெற்றிக்



கிண்ண கால்பந்து, கைப்பந்து சுற்றுப் போட்டிகள் நேற்று நிறைவு பெற்றன.

கால்பந்து இறுதிப் போட்டியில் ஸ்கந்தபுரம் ஸ்கந்தா அணியை எதிர்த்தாடிய புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி



பெற்று சம்பியனானது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஸ்கந்தா அணி வீரர் மு.சிவகுமாரும், சிறந்த கோல் காப்பாளராக விக்கினேஸ்வரா அணி வீரர் து.பார்த்தீபனும், போட்டியின்



தொடர் நாயகனாக விக்கினேஸ்வரா அணியின் ச.சந்திரபாலாவும் தெரிவாகினர்.

22 அணிகள் கலந்து கொண்ட கால்பந்து சுற்றுப் போட்டியின் சிறந்த அணியாக மருதநகர் உதயதாரகை அணி தெரிவானது.

கைப்பந்துப் போட்டியில் கிருஷ்ணா பாரதி அணியை எதிர்த்தாடிய இளந்தென்றல் அணி சம்பியனானது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக இளந்தென்றல் அணி வீரர் ந.சத்தியசொரூபன் தெரிவானார்.

முன்னதாக சிறப்பு நிகழ்வாக மகளிர் கால்பந்து காட்சி ஆட்டம், காந்தி விடுதி சிறுவர்களின் கராத்தே என்பன இடம்பெற்றன.



மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கு மாவீரர்களான லெப்.பாபு, வீரவேங்கை கூர்க்காஸ், கப்டன் சுபாங்கி, கப்டன் ரமா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணங்கள் அவர்களது பெற்றோர்களால் வழங்கப்பட்டன.

மத்தியஸ்தர்களாக புவனேந்திரராஜா, சிவநேசன், பரஞ்சோதி, கிருஷ்ரிரூபன் ஆகியோர் கடமையாற்றினர். (லோ,தீ)







### முன்னணி வீராங்கனைகள் விலகல்

ஜேர்மனி டென்னிஸ் தொடரில் இருந்து முன்னணி வீராங்கனைகள் செரினா வில்லியம்ஸ், ஜெனிபர் கேப்ரியாட்டி ஆகியோர் விலகிக் கொண்டனர்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் டென்னிஸ் போட்டி, ஜேர்மனி நாட்டின் பில்டர்ஸ்டட் நகரில் அடுத்தவாரம் நடக்கிறது. வைரஸ் காய்ச்சல் காரணமாக இந்தத் தொடரில் இருந்து பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் கடந்த வாரம் விலகிக் கொண்டார். விலகல் பட்டியல் மேலும் தொடர்கிறது.

அமெரிக்க வீராங்கனைகள் செரினா வில்லியம்ஸ் காயம் காரணமாகவும், ஜெனிபர் கேப்ரியாட்டி உடல் நலக்குறைவாலும் இந்தத் தொடரில் இருந்து விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்தனர்.



**சிந்தனைக்கு**

மூன்றாம் உலகில், ஒடுக்கப்படும் இனங்களுக்கும், அடக்கப்படும் மக்களுக்கும் எமது புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு முன்னுதாரணமாக- வழிகாட்டியாக- அமைந்திருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## சிறுபான்மையினர் பலத்தைச் சிதைக்க!

வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்ற சட்ட மூலத்தை அரசாங்கம் விரைவில் அமுலாக்கம் செய்வதில் தீவிரம் காட்டி வருகின்றது. எதிர்வரும் ஏழாம் திகதி இச்சட்ட மூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசாங்கத் தரப்பு குறியாக இருப்பதாக அரச தரப்புத் தகவல்களில் இருந்து உணரக்கூடியதாகவுள்ளது.

ஐ.ம.சு முன்னணி அரசாங்கம் இச்சட்ட மூலத்தில் தீவிர அக்கறை காட்டுவதென்பது ஒன்றும் தேர்தலில் மோசடிகள் இடம் பெறாமல் தடுத்து விடுவதற்கோ அன்றி சனநாயக ரீதியில் அரசாங்கம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காகவோ அல்ல. அரசாங்கத்தின் ஒரே இலக்கு. சிறுபான்மை இனங்களின் அரசியற் பலத்தைச் சிதைவுறச்செய்வதே ஆகும்.

வாக்களிப்பதற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்பது சிங்களவரைப் பொறுத்து பெரியளவிலான பாதிப்பு எதையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் பெரும் பகுதியினர் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அவ்வாறு பெற்றுக்கொள்ளாது போனாலும் விரைவில் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

ஆனால் சிறுபான்மையினரைப் பொறுத்து குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தே இது பாரிய கேடு விளைவிப்பதாகவும், அவர்களின் சனநாயக ரீதியான உரிமைகளை மறுப்பதாகவும் அமையத்தக்கதாகும். ஆனால் இது சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தெரியாததல்ல இதனால் அடையாள அட்டை அவசியம் என்பது புரிந்து கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையல்ல.

மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்து பிரஜாவுரிமை பெறுதலில் இருந்து தேசிய அடையாளஅட்டை பெறுதல் வரையில் நெருக்கடி மிக்கதொன்றாகவே உள்ளது. அதாவது இவை தொடர்பான ஆவணங்களை அவர்கள் தேடிக்கொள்வதென்பதும், அதன் மூலம் அடையாள அட்டைகளைப் பெறுதல் என்பதும் மிகவும் சிக்கல் நிறைந்ததாகவே இன்றும் உள்ளது. ஆகையினால் இதனைக் காரணம் காட்டி வாக்களிக்கத் தடைசெய்தல் என்பது அம்மக்களின் சனநாயக உரிமையை மறுப்பதற்குச் சமமானதாகும்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தும் இது குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்தத்தக்கதாகும். கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தமிழ் மக்களின் தாயகத்தில் சிறிலங்கா இராணுவம் கட்டவிழ்த்து விட்ட போரினால் மக்கள் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டி வந்தது. பல தடவைகள் இடப்பெயர்வுகளைச் சந்திக்க வேண்டியும் வந்தது. இவற்றின் காரணமாக தேசிய அடையாள அட்டைகள், பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட்ட முக்கிய ஆவணங்களும் தொலைந்து போயும் காணமற் போயும் உள்ளன. இவற்றை மீளப் பெறுதல் என்பதும் இலகுவானதாக இல்லை. இந்நிலையில் தேசிய அடையாள அட்டை கோருவதென்பது அவர்களின் வாக்களிக்கும் உரிமையை மறுப்பதற்கு ஒப்பானதாகும்.

இதேபோன்று வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் இச்சட்டத்தின் மூலம் பாதிப்பிற்குள்ளாகும் நிலையே உள்ளது. இவர்களும் கடந்த இரு தசாப்த காலமாக யுத்த பிரதேசத்திற்குள் வாழ்ந்தமை காரணமாக தேசிய அடையாள அட்டை போன்ற ஆவணங்களை முழுஅளவில் கொண்டுள்ளவர்களாக இல்லை.

இந்நிலையில் தேர்தலில் வாக்களிக்கத் தேசிய அடையாள அட்டை அவசியமென்ற அரசின் சட்டமூலமானது நடைமுறையில் சிறுபான்மை மக்களின் வாக்குரிமைகளைப் பறிக்கும் அன்றிக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவே இருத்தல் முடியும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து சிறுபான்மையினர் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிப்பதென்பது என்றும் எரிச்சல் ஊட்டும் விடயமாகவே இருந்து வருகின்றது. ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கியதெனினும் இதனை ஒழித்து விடுவதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் பகீரதப் பிரயத்தனங்களைச் செய்து வருகின்றனர். இதற்கான முதற்படியாகவே வாக்களிப்பிற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதற்குத் தமிழ் தரப்பில் இருந்து எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டாலும் அரசாங்கம் இதனைக் கருத்திற்கொள்ளப்போவதில்லை. இத்தகையதொரு நிலையே தற்பொழுது இ.தொ.கா விற்கும் ஏற்பட்டுள்ளது. இச்சட்ட மூலத்தில் தமது திருத்தம் இடம்பெறவேண்டும் என இ.தொ.கா வலியுறுத்திய போதிலும் அரசாங்கம் இதனைக் கண்டுகொள்ளவில்லை.

இ.தொ.கா அரசாங்கத்தில் பங்கேற்பினும் இத்தகையதொரு அவலம் ஏற்பட்டுள்ளமைக்கு இ.தொ.கா நிபந்தனையற்ற விதத்தில் சரணாகதி அடைந்தது போன்று அரசாங்கத்தில் பங்கேற்க முடிவு செய்ததே ஆகும். ஆனால் ஆட்சியில் பங்காளிகள் என்ற ரீதியில் இச் சட்டமூலம் நிறைவேற்ற இ.தொ.கா ஆதரவு அளிக்குமேயானால் அது அக்கட்சியைப் பொறுத்து தற்கொலை செய்வதற்கு ஒப்பானதாகும்.

# பா.உ.களின் ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டத்தை இரத்துச் செய்ய ஜே.வி.பி ஆலோசனை

பாராளுமன்ற உறுப்பினர்களின ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டு மென ஜே. வி .பி ஆலோசனை தெரிவித்துள்ளது. இது தொடர்பான ஆலோசனை எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் அதனை நிதியமைச் சரிடம் ஜே. வி. பி யின் பிரதிநிதிகள் அண்மையில் சமர்ப் பித்துள்ளனர். 1977ஆம் ஆண்டு முன்னாள் சனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவினால் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு 5 வருட முழு ஓய்வூதியத் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இது தற்போதைய நிலையில் நாட்டின் செலவீனங் களுக்கு மத்தியில் பொருளா தாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு திட்டமாகும் என்பதே ஜே. வி. பி யின் கருத்தாகும்

இதேவேளை அரசாங்கம் பல்வேறு வழிகளில் உள்நாட்டு வருமானங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் கொண்டு வரப்பட்ட வரி செலுத்துகை திருத்தச் சட்டமூலத்தின். அடிப் படையில் அரசாங்கத்துக்கு 305 கோடி ரூபா கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், அதனைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு திறைசேரி வருமான வரி திணைக் களத்திற்கு ஆணையிட்டுள்ளது.

இதற்கிடையில் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து கொழும்புக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு, வரி, அறவிடுவதன் மூலம் வரு மானத்தைத் திரட்டவும், அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனினும் இந்தத் திட்டத்திற்கு அரசாங்க மட்டத்தி லேயே சிலர் அதிருப்தி வெளி யிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது. இது அரசாங்கத்திற்கு மக்கள் மத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அடிப்படையி லேயே அந்த அதிருப்தி வெளி யிடப்பட்டுள்ளது. (32)

# வெலிமடப் பகுதிக் குண்டுவெடிப்பில் ஒருவர் பலி ; ஒருவர் காயம்

வெலிமடை ஊவா பரணகம அக்கரமலை தோட்டத்தின் 10 ஆவது பிரிவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் பலியானார். கோபாலன் விமலாநந்தன் என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவத்தில் ஆனந்தகுமாரன் என்பவர் காயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். தோட்டப்புறத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, புதைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றின மீது மண்வெட்டி மோதிய போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர் பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (32)

# சமாதானப் பேச்சுவார்த்தையினால் விமானப்படைக்கு 15 கோடி ரூபா நட்டமாம்

போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் சமாதானப் பேச்சுவார்த் தைகளின் நிமித்தம் சிறிலங்கா வான் படையினருக்கு 15 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக வான்படைத் தகவல்கள் தெரிவிக் கின்றன. அரசாங்க பிரதிநிதிகள், சமாதானத் தூதர்கள், மற்றும் இராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், எனப் பலதரப்பட்டவர்களையும் பல இடங்களுக்கு ஏற்றிச்சென்ற மையின் அடிப்படையிலேயே இந்தச் செலவு ஏற்பட்டுள்ளதாக வான்படைத் தரப்புத் தெரிவித்துள் ளது. வான் படை உலங்கு வானூர்திகளுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கான பயணத்துக்காக ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவாகிறது. இதன் அடிப்படை யில் சமாதான முன்னெடுப்பு களுக்காக இதுவரை சிறிலங்கா வான் படை உலங்கு வானூர்தி கள் ஆயிரத்து இருநூற்று 70 மணித்தியாலங்கள் தமது பயணங்களை மேற்கொண் டுள்ளன. சுமார் 500 பயணங்கள் மூலம் இந்த மணித்தியாலங்கள் கணக் கிடப்பட்டுள்ளன. இதுவரை காலமும பெல் 212 , பெல் 412 மற்றும் எம் ஐ 17 ஆகிய உலங்கு வானூர்திகள் சமாதானப் பயணங்களுக்காகப் பயன்படுத் தப்பட்டுள்ள போதும், அதற்கான செலவுகள் யாவும் பயிற்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மின்சாரத்தில் இயங்கும் சிற்றூர்திகள் இந்தியாவிலிருந்து தருவிக்க ஒப்பந்தம்

இந்தியாவில் இருந்து மின்சா ரத்தில் இயங்கும் ரேவா ரக சிற்றூர்திகளை இறக்குமதி செய்ய செலின்கோ நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இதன் அடிப்படையில் செலின்கோ நிறுவனமும் மின்சார சிற்றூர்தி களை உற்பத்தி செய்யும் மைனி நிறுவனமும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளன. அண்மையில் இடம்பெற்ற இதற் கான நிகழ்வில் செலின்கோ நிறுவனத்தின் தலைவர் லலித் கொத்தலாவல, இந்திய மைனி நிறுவனத் தலைவர் சுதர்சன் மைனி ஆகியோர் கைச்சாத் திட்டனர். நவீன தொழில்நுட்பங் களைக் கொண்ட இந்த ரேவா ரக சிற்றூர்திகளுக்கு இந்தி யாவில் அதிக கேள்வி காணப்படுகிறது. சுற்றாடலுக்கு மாசு இல்லாத அதேவேளை இலங்கையில் அதிகரித்து வரும் எரிபொருளின் விலையின் மத்தியில் இந்த மின்சார சிற்றூர்திகளின் அறிமுகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனச் செலிங்கோ நிறுவனம் தெரிவித்துள் ளது. (32)

# பாராளுமன்றத்தில் சமூகமளிக்காமைக்கு ஐ.தே.க. பா.உகள் மன்னிப்புக்கோரல்

(கொழும்பு)

சென்ற மாதம் (செப்ரெம்பர்) 22ஆம் திகதி சிறிலங்கா பாராளு மன்றத்தில் வரிமன்னிப்புச் சட்டம் தொடர்பான விவாதத்திற்கு சமூக மளிக்காமைக்காக ஐக்கிய தேசியக கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கள் சிலர் கட்சித் தலைமையிடம் மன்னிப்புக்கோரியுள்ளனர்.

கட்சியின் அரசியல்குழு குறித்த தினத்தில் பாராளு மன்றிற்கு சமுகமளிக்காத சஜித் பிரேமதாச, நவின் திஸ்ஸநாயக்க, திலிப் வேடாராச்சி, லரைன் பெரேரா ஆகிய நால்வரையும் சமூகமளிக்காமைக்கான காரணங் களை விளக்குமாறு கோரியிருந்தது.

இதற்கமைய கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் சஜித்பிரேம தாச மற்றும் நவின் திஸ்ஸ நாயக்க ஆகியோர் இதுபோன்ற தவறுகள் இனிமேல் தம்மால் இழைக்கப்படாது என உறுதி கூறி சமுகமளிக்காமைக்காக கட்சித் தலைமைப்பீடத்திடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஏனையோர் தாம் சமூகமளிக்க முடியாமைக்கான காரணங்களை ஆதாரங்களுடன் சமர்ப்பித்துள் ளனர்.

# தனியார் சிற்றூர்திகள் மாதமொன்றுக்கு 7கோடி ரூபா பாதாள உலகிற்கு வழங்குகின்றன

தனியார் சிற்றூர்திகள் மாதம் ஒன்றுக்கு பாதாள உலகக் குழுக் களுக்கு மாத்திரம் ஏழு கோடி ரூபாவைக் கப்பமாக வழங்கி வருவதாகத் தனியார் சிற்றூர்திச் சங்கம் தெரிவித்துள்ளது. இதனைக கட்டுப்படுத்த இதுவரை நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட வில்லை என சங்க அதிகாரி ஒருவர் குற்றம் சுமத்தினார். கொழும்பிலிருந்து மொனராகல மற்றும் அம்பாறை போன்ற இடங் களுக்குச் செல்லும் தனியார் சிற்றூர்திகள் நாள் ஒன்றுக்கு சுமார் 300 ரூபாவை இவ்வாறு செலுத்துகின்றன.ஏனைய பகுதி களின் சிற்றூர்திகள் 100 ரூபா முதல் 150 ரூபா வரையில் கப்பப் பணத்தைச் செலுத்தி வருவதா கவும் தகவல் ஒன்று வெளியாகி யுள்ளது. (32)

# எழுச்சி பூர்வமாக நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட மகளிர் சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு நேற்றுத் தாயகநேரப்படி காலை 10.00 மணியளவில் ஆரம்பமானது. இந் நிகழ்வின் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை நல்லூர் நல்லை ஆதினக் குரு முதல்வர் வணபிதா இராஜரட்ணம் அடிகளார்,இலங்கை வலைப் பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவர் திருமதி ரூபசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழினி ஏற்றினார். அதனைத் தொடர்ந்து 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மாவீரர் கவிகரனின் சகோதரி ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அணிவித்தார். தொடர்ந்து முன்பள்ளி இணைப்பாளர் வசந்தகுமாரி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாயகின.

வரவேற்புரையைக் கல்விப் பணிப்பாளர் திருமதி யோகராசா (முன்பள்ளி) நிகழ்த்தினார். ஆசியுரையை நல்லூர் ஆதின முதல்வரும்,வணபிதா ஜெயக்குமார் அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறப்புரையினை மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன் வண. பிதா இராஜரட்ணம் பெண்கள் விவகார இணைப்பாளர் செல்வி ஜெயந்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

மதிய இடைவேளையைத் தொடர்ந்து பெண்கள் பண்பாட்டு மையத்தில் அரங்காற்றுகை நிகழ்வும், திருமதி மீரா அருள் நேசனது கருத்துப்படி இடம்பெற்றது. நன்றியுரையைப் பெண்கள் விவ்கார உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி நிகழ்த்தினார். (36)

**தமிழீழ...**

அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் நேரு.குணரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். மண்டபம் நிறைந்த மக்களுடன் பேரெழுச்சியுடன் நடைபெற்ற இந் நிகழ்வில், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நூலின் முதற்பிரதியை வெளியிட்டு வைத்தார். இந் நூல் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆளுமையைச் சித்திரிக்கும் அதிக ஒளிப்படங்களை தாங்கி வெளிவந்துள்ளது.

*–வெள்ளவாய்க்கால்களைப் படையினர் தடுத்திருப்பதால்–*

# தென்மராட்சியில் வயல்கள் நீரில் மூழ்கி அழியும் அவலம்

இராணுவத்தினரது உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள பிரதான வெள்ளவாய்க்கால்கள் பலவும் தடுக்கப்பட்டுள்ளதால் தென்மராட்சிப் பகுதியில் பெரும்பாலான வயல்நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் நாசமாகி வருவதாக அப்பகுதி விவசாய அமைப்புகள் பலவும் குற்றஞ்சாட்டியுள்ளன.

குடாநாட்டில் பெரும்போக கால நெற்பயிர்ச் செய்கை ஆரம்பமாகியுள்ள நிலையில் விவசாய நடவடிக்கைகளில் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக நிலவி வரும் சிக்கல்கள் தொடர்பாக நேற்றைய தினம் விசேடமாக இரண்டு கூட்டங்கள் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்றிருந்தன.

பிற்பகல் உசன் இராமநாதன் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கூட்டத்திற்குத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சீனிவாசன் யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் கு.சுந்தரம்பிள்ளை, கமநல சேவைத்திணைக்கள அதிகாரிகள், மற்றும் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவ அதிகாரிகள் மற்றும் விவசாயப்பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர். குறிப்பாகப் படையினரின் உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படும் கரம்பகம் மற்றும் மிருசுவில் பகுதியிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் பராமரிக்கப்படுவதில்லை எனவும், படைத்தரப்பு வெள்ளவாய்க்கால் தடைகளை ஏற்படுத்தியிருப்பதாகவும், சங்கப்பிரதிநிதிகள் குற்றம் சாட்டினர். இதனால் உசன் பகுதியிலுள்ள வயல்கள் வெள்ளத்தினுள் மூழ்கி பயிர் அழிவு ஏற்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் உடனடியாக வெள்ள வாய்க்கால்கள் புனரமைக்கப்பட முடியாதெனவும், எதிர்வரும் ஆண்டுகளில் இவ்விடயங்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும் எனவும் அங்கு சமூகமளித்திருந்த அரச அதிகாரிகள் தரப்புத் தெரிவித்தன.

இதனால் வயல் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காக வெள்ளவாய்க்காலிலுள்ள தடைகளை அகற்ற உதவ படைத்தரப்பு முன்வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை விவசாய நடவடிக்கைகளுக்கென விடுவிக்கப்பட்டுள்ள தென்மராட்சி தெற்கு வயல் பகுதியில் விவசாய நடவடிக்கையினை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்படும் கூட்டம் ஒன்று நேற்றுக்காலை மறவன் புலோ சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் படையதிகாரிகள் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கமநலசேவைத்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விடுவிக்கப்பட்டுள்ள வயல் பிரதேசத்தில் பெருமளவான கட்டாக்காலி மாடுகளால் பாதிப்பு ஏற்படுவதுடன் கடந்த கால யுத்தத்தின் காரணமாகவும் விதை உள்ளீடுகளைப் பெறமுடியாது இருப்பதாகத் தெரிவித்த விவசாயிகள் இதனால் விவசாய நடவடிக்கையினை ஆரம்பிப்பதில் ஆர்வமற்றிருப்பதாகவும் தெரிவித்தனர்.

கட்டாக்காலி மாடுகளின்னை மட்டுப்படுத்த முட்கம்பி வேலியமைத்து கொடுக்கவும் விதை உள்ளீடுகளை உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் இலவசமாக வழங்கவும் யாழ்.அரச அதிபர் அங்கு உறுதியளித்திருந்தார்.எனினும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள மறவன் புலோ கிராமத்தில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள 75 குடும்பங்கள் தவிர்ந்த வேறு எவரையும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் பயிர்ச் செய்கையில் ஈடுபட அனுமதிக்க முடியாதெனப் படைத்தரப்பு மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (27)

**இளைஞர்...**

இச் சம்பவம் தொடர்பாக அருகிலுள்ள சக்கோட்டை 512 படைப் பிரிவு முகாமிற்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து படை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு நேரடியாக விஜயம் செய்து சுமூக நிலையை ஏற்படுத்தியதுடன் குறித்த படைச்சிப்பாய்கள் மது போதையில் இருந்ததாகக் கூறி முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர். இதனிடையே படையினரால் மோசமாகத் தாக்கப்பட்ட இளைஞனான சூரசிங்பிரகாஸ் சிகிச்சைக்காக வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனார். (27)

## நீர்கொழும்பில் கொள்ளையிடப்பட்டவை வவுனியாவில் விடுதலைப்புலிகளால் மீட்பு

(வவுனியா செய்தியாளர்)

நீர் கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் வவுனியாவில் வைத்து விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; வவுனியாவில் இருந்து நீர்கொழும்பிற்கு வர்ணம் தீட்டும் வேலைக்காகச் சென்ற நபர் தான் தங்கியிருந்த வீட்டிற்கு அருகே உள்ள வீட்டினை இரவு உடைத்து அங்கிருந்த குளிர் சாதனப்பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி உட்பட பல பொருட்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு வவுனியாவிற்கு வந்து விட்டார்.இது தொடர்பாக நீர் கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர் வவுனியாவில் உள்ளவிடுதலைப்புலிகளின் அரசி யல்துறைச் செயலகத்தில் முறையிட்டதற்கமைய விடுதலைப் புலிகளின் திடீர்ச்சோதனை மூலம் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட் டுள்ளன. எனினும் கொள்ளையடித்தவர் தலைமறைவாகியுள்ளார். (10)

# கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு வெற்றி நிச்சயம் மாதிரிப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட கணித, விஞ்ஞானப் பிரிவு 2005ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப்பரீட்சை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிளி. மத்திய கல்லூரியில் நடைபெறும். பரீட்சைக்கு அடுத்தநாளே வினாத்தாள் மீட்டல் வகுப்பும் இடம்பெறும்.இதன் முதலாவது பரீட்சை எதிர்வரும் 08ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 06ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் ஒன்றியத்தில் பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

கூடுதலான புள்ளிகளைப் பெறும் மாணவர்களது பெயர் பத்திரிகையில் வெளியிடப்படுவதுடன், பரிசில்களும் வழங்கப்படும்.

# வவுனியா பொது வைத்தியசாலையில் கண் கிளினிக் இடைநிறுத்தம்

வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற்று வந்த கண் கிளினிக் சில நாட்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் வாரந்தோறும் புதன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களிலும் கண் கிளினிக் நடைபெற்று வந்தது. இக்கண்கிளினிக் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 6,8,9 ஆம் திகதிகளில் நடைபெறமாட்டாது என வவுனியா பொது வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன. எனினும் அவசர சிகிச்சைகள் மட்டும் நடைபெறும் என அறிவித்துள்ளனர். (10)

# செட்டிக்குளம் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு வருவதாக வவுனியா மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வவுனியா பொது வைத்தியசாலையிலேயே இதுவரை காலமும் அவசர சிகிச்சைப் பிரிவு இயங்கி வந்தது. தற்போது செட்டிகுளம் மாவட்ட வைத்தியசாலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்து பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்வருட இறுதிக்குள் வவுனியாவில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்படும் என்றார். (10)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 2004ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான கணித,விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் வரும் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பல்கலைக்கழகப் புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற உள்ளது. இதில் மேற்படி அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் கேட்டுக் கொள்கின்றார்.

**தமிழரின்...**

இன்று வன்னியில், கிளிநொச்சியில் தமிழீழ நிர்வாகத்தின் தலைமைக் காரியாலயங்கள் அமைந்துள்ளன. இங்கு தினந்தோறும் உலகநாடுகள் பலவற்றின் இராஜதந்திரிகள் வந்து சென்ற வண்ணமுள்ளனர். இது எதனைக் காட்டுகின்றதென்றால் எமது போராட்டம் சர்வதேச மயப்படுத்தப்பட்டு சகல ஆளுமையுள்ள ஒரு போராட்டமாகவே சர்வதேசம் எம் போராட்டத்தைப் பார்க்கின்றது என்பதையே காட்டுகின்றது.

இதற்கு உண்மையான மூலக்கரு ஒரு தீர்க்க தரிசனத்துடன், தீர்க்க தரிசனமான கொள்கைகளை வகுத்து வழிநடத்திச் செல்லும் தேசியத்தலைவரின் பன்முகப்பட்ட ஆளுமை தான். அந்த வகையில் இந்த நூலை வெளியிட்டதன் மூலம் சுவிஸ் வாழ் தமிழ்மக்களும் பெருமைப்பட வேண்டும்.

இந்த விடுதலைப் போராட்டத்தில் தலைவரினுடைய ஆளுமை வீச்சின் சகல விதமான் அம்சங்களும் எவ்வாறு உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு சாதாரண மனிதப்பிறவியால் இல்லாது அபூர்வமான ஒரு சிலரால் தான் முடியும் என்பது அனுபவத்திலிருந்து என்னால் உணரக்கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறான ஒரு தலைவரைப் பெற்ற இந்த விடுதலைப் போராட்டத்தினுடைய வரலாறு, வளர்ச்சி, எழுச்சி என்பவற்றை இந்த நூல் வடிவாகப்பார்க்கும்போது கட்டாயம் எமக்கு விடுதலைகிடைக்கும், அதுவும் இந்தத் தலைவருடைய காலத்திலேயே எமது தலைவர் 50ஆவது வயதை அடைகின்ற-இந்த பொன்விழாக்காண்கின்ற பொன்னான நேரத்தில் கட்டாயம் விடுதலை கிடைக்கும் என்பது இந்த நூலைப் பார்க்கிறவர்களுக்கும், எமது போராட்டத்தை நன்றாக அவதானித்துக் கொண்டிருப்பவர்களுக்கும் தெரியும்.

எந்தவிதமான சக்திகளாலும் எந்தவித இராணுவ ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகளாலும் எமது போராட்டத்தை ஒருபோதும் ஒடுக்கமுடியாதென்பதும், எமது விடுதலை விரைவாகக் கிடைக்கும் என்பதும் அதனூடாக விளங்கும்.

தற்போது இரண்டு வருடகாலமாக யுத்த நிறுத்தம் இருந்து வருகின்றது. இந்த யுத்த நிறுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தால் எம்மை நோக்கி இரண்டு பக்கங்களால் வியூகம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதில் ஒரு வியூகம் கடலில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழீழத்தின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டிருக்கின்றதென்பது உங்களுக்குத் தெரியும்.

கடலால் எங்களுக்குக் கிடைக்கின்ற பலம், எங்களுடைய படைப்பலத்திற்குரிய பின்பலம் இந்தக் கடலிலேயே தங்கியுள்ளது. அந்தக் கடலில் பெரிய வியூகம் அமைக்கப்பட்டு வருகின்றது.

மற்றைய வியூகம் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நிதியை நிறுத்துவது இதற்காக சிங்களப்புத்தி ஜீவிகள், ஊடகவியலாளர்கள் மூலம் ஆங்கில சிங்களப் பத்திரிகைகளைப் பயன்படுத்துவதுடன் இரகசியமான முறையில் வெளிநாடுகளில் முகவர்களையும் நிறுத்தி எமக்கெதிராக வியூகங்களை அமைத்துள்ளன. இதனை முறியடித்து எமது தேசத்தின் விடுதலைக்காக அனைவரும் செயற்பட வேண்டும்.

ஜெனீவாவில் வந்து உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் சட்ட வல்லுனர்களையும், அரசியல் யாப்பு வல்லுனர்களையும் அழைத்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாகத் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

உலகத்திற்கு நாங்கள் ஒன்றைச் சொல்கின்றோம் என்னவென்றால் நாம் சமாதானப் பேச்சுவார்த்தையூடாக எங்களுடைய மக்களுக்கான தீர்வை அடைய தயாராக இருக்கின்றோம். இந்த சமாதான வரைவின் ஊடாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என்பது தொடர்பாக ஆலோசனையில் ஈடுபட்டுள்ளோம். இதேவேளையில்தான் ஐம்பெரும் பொக்கிசமாகவும், தமிழ் தேசிய இனத்தின் சொத்தாகவும், தமிழர் போராட்ட வரலாற்றின் நாயகனாகக்கருதப்படும் தேசியத்தலைவரின் ஆளுமை வீச்சை வெளிப்படுத்துகின்ற ஒரு பொக்கிசமாக இந்த நூல் விளங்குகின்றது. இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்கள்தான் எமது போராட்டத்தின், வரலாற்றின் ஒவ்வொரு திருப்புமுனைகளிலும், பெரும் பக்கபலமாக, போராட்டத்தின் முதுகெலும்பாக இருந்து செயற்பட்டுள்ளார்கள் தொடர்ந்தும் அவ்வாறு செயற்படவேண்டும். என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.